REGISTERED NO. M. 1464,

# நாடார்குலமித்திரன்

# THE NADAR KULA MITRAN.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப் பிரசங்க சபையினின்று

வெளிவரும்,

மாதம் மும்முறைப் பதிப்பு.

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" (திருக்குறள்)

சுதந்தரம்! சமத்துவம்!! சகோதரத்வம்!!!

பத்திராதிபர், சு. ஆ. முத்துநாடார் பத்திராசிரியர்

நாடார்குல மித்திரன்
சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு வருடம் 1-க்கு ரூ 3-8-0.
சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா முதலிய வெளிநாட்டிற்கு வருடம் 1-க்கு ரூபா 4-0-0.

நாடார்குல மித்திரன்.
விளம்பர விகிதம்.

கலம் 1-க்கு தடவை 1-க்கு ரூபா 6-0-0.
சில்லரை விளம்பரம் அங்குலம் 1-க்கு ரூ 0-4-0
நீண்டகாலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதவும்.

மலர் 4. ] துந்துபி வருஷம் ஆவணிமீ 26உ திங்கட்கிழமை (அருப்புக்கோட்டை) 1922 வருஷம் செப்டம்பர்மீ 11உ [ இதழ் 2

## சௌந்தரகாந்தி.

இது ஒரு

புதிய நாவல்! இனிய நாவல்!!
மதியைவிளக்கி மகிழ்ச்சியைத் தரும் நாவல்!!!

[இஃது திருமலையப்பபுரம், பா. பி. இரத்தினபாண்டிய ரவர்களால் எழுதப்பெற்றது.]

பாண்டிய பரம்பரையைப்பற்றியும். பாண்டிய மன்னர்களின் ஆட்சி முறையைப்பற்றியும் தெளிவாய் நாவல்ரூபமாய், சொற்சுவைபொருட்சுவையோடுமுதல்முதல் வெளிவந்த தமிழ் நாவல்இதுவே. கற்றோரும், மற்றோரும் கவிந்து கொண்டாடப்பெற்றது ஆண். பெண் இருபாலருக்கும் அருமையான பெருமையைத்தரும் பேர்பெற்றது. படிக்க புத்தியையும், பார்க்க வித்தையையும் தரும் சக்திபெற்றது. ஆசிரியர் படத்தோடும் கூடியது.

இதன் விலை அணு 12. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

நாடார்குலமித்திரன் ஆபீஸ்,
அருப்புக்கோட்டை.

## ஜீவரத்னம்

ஜ்வரங்கள், இருமல், கபம், காஸம், க்ஷயம், ஆஸ்த்மா, குன்மம், அஜீரணம், வயிற்றுவலி, மந்தம், காலரா, பிளேக், தேகத்திலுண்டாகும் பலவித நோய்கள், தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, ஜலதோஷம், மார்சளி, பல் வியாதிகள், காதுவலி. இன்னும் இதர வியாதிகளையும் அதிசீக்கிரத்தில் குணப்படுத்தும்.

புட்டி ஒன்றுக்கு விலை ரூ 2—0—0.
தபால் சார்ஜ் பிரத்யேகம்.

குறிப்பு:-ஏஜண்டுகள் தேவை. வியாபாரிகளுக்கு நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

விலாசம்: –
ஜீவரத்னம் கம்பெனி,
நெ 6. சேலம்,
(தென் இந்தியா)

## மாயாவி.

மந்திர, தந்திர, இரகசியங்கள், ஜால வேடிக்கைகள். சீட்டுக்கட்டு தமாஷ்கள், கைத்தொழில்கள் (மெஸ்மரிஸம்) மனோ வசிய உண்மைகள் முதலிய இரகசியங்களை வெளிப்படுத்தும் அற்புதமான ஓர் மாதாந்தர தமிழ்ச் சஞ்சிகை.

இதன் வருடச்சந்தா ரூபா 3 8 0
வெளிநாடுகளுக்கு ரூபா 4 0 0
தனிப்பிரதி அணு 6.

மானேர், மாயாவி ஆபீஸ்,
புதுக்கோட்டை

## விஜயவிகடன்.

மாதம் நான்குமுறை

1922 ஜூலைமீ 15உ முதல் பிரசுரமாகும்

பழையபடி முன் கையொப்ப நேயர்கள் பலர் வேண்டுகோளால் முன் நடத்தியிருந்த உபபத்திராதிபர்களாலும், மானேஜராலும் கவர்ன்மெண்டு அனுமதியின் மேல் ஆரம்பிக்கலாயிற்று.

இதில் நானாவிதமான விநோத விகட வியாசங்களும், விகடகவிகள், விகட நாவல்கள், விகட விடுகதைகள், விகடகோர்ட்டுகள், துண்டு விகடங்கள், முதலியவைகள் எளிய தமிழ்நடையில் வெளியாகும்.

இதன் வருடச்சந்தா உள்நாடுகளுக்கு ரூபா 4 8 0 வெளிநாடுகளுக்கு ரூபா 5 0 0

விஜய விகடன் ஆபீஸ், போஸ்ட் பாக்ஸ் நெ. 560.
வண்ணாரப்பேட்டை போஸ்டு, மதராஸ்.

வெளியாகி விட்டது! வெளியாகி விட்டது

அநுபோக

## "கைத்தொழில் போதினி."

என்னும் அருமையான கைத்தொழில் சாஸ்திரம் வெளியாகி விட்டது. இதிலடங்கிய அனேக இரகசிய முறைகளைக் கொண்டு, ஏழைகளை வரும் முன்பணம் அதிகச் செலவில்லாமலும், பிரயாசை இல்லாமலும், நிறையபணம் சம்பாதிக்கலாம் சுயேற்சியாய் சுகஜீவனம் செய்யவிரும்பும் ஒவ்வொருவருக்கும் தக்கசமயம் இதுவே என்பதை மறந்து விடாதீர்கள். காப்பி 1-க்கு விலை ரூபாய் 1. வி. பி. செலவு அணு 5. (முன்பணம் அனுப்புவோருக்கு தபால் சார்ஜ் இனாம்

K. N. S. & Co.,
ARIMALAM.

## TALISMANS
AND
## CHRAMS

(சகல துன்பங்களையும் ஒழித்து சுக வாழ்வை விரும்பும் ஜனங்களுக்கு.)

மேன்மையும் பணமும் படிப்பும் பெருந்தன்மையும் அடைய ரூ 7-8-0
சுகமும் சரீரசம்மந்தமான பலமும் அடைய ரூ 7-8-0
வாக்கு வன்மையும் பேசுந்திறமையும் பெற ரூ 7-8-0
எந்தக் காரியத்திலும், வியாஜ்ஜியத்திலும் வெற்றி பெறுவதற்கு ரூ 10-0-0
விளையாட்டிலும் பந்தயத்திலும், ஆட்டக் குதிரை முதலியவைகளில் வெற்றி பெறுவதற்கு ரூ 7-8-0
வர்த்தகத்திலும், வியாபாரத்திலும் வெற்றி பெறுவதற்கு ரூ 10-8-0
பெண்களின் மேல் புருஷர்கள் காதல்கொள்ள ரூ 7-8-0
புருஷர்களின் மேல் ஸ்திரிகள் காதல்கொள்ள ரூ 10-8-0
எதிர் இனங்களின் மேல் காதலும் மயக்கும் சக்திக் குரியதற்கு ரூ 7-8-0
விவசாயத்திற்கும், செழிப்புக்கும், பயிரிடுவதற்கும், பயிரின் நல்லவளர்ச்சிக்குமுரியதற்கு ரூ 7-8-0
காரியம் தேடித் தொண்ட சாதகமாயுள்ளதற்கு ரூ 100-0-0
இரத்தினம் பெறுவதற்கு ரூ 225-0-0
நீண்டகால ஆயுள்பலன் சொல்ல ரூ 15-0-0

முழுத்தொகையையும் முன்பணமாக மணியாடரில் அனுப்பவேண்டும். வி. பி இடையாது.

D. A RAMDUTH, astrologer,
NO. 30, NCHEKU STREET,
colombo, (ceylon.)

## நாடார் நண்பன்.

திருவிதாங்கூர் நாடார்கள் குலவிருத்தியை நாடி வெளிவரும் ஓர் மாதாந்தர தமிழ்ப்பத்திரிகை இதில் கல்வி கைத்தொழில், கிருஷி, நாட்டுச் சமாச்சாரங்கள் குலச்சரித்திரம் நாடார் சமாஜங்களின் நடபடிக்கை முதலிய நாடார்களுக்கு இன்றியமையாததும் அறியவேண்டிய விஷயங்களும் எழுதப்படும். ஆகையால் எல்லா குலாபிமானிகளும் இந்தப் பத்திரிகையை வாங்கி வாசித்து நாடார் குலத்தை விருத்திபண்ண வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

சந்தா விபரம்.

திருவிதாங்கூறுக்குள் அஞ்சல் கூலி உள்பட வருடம் 1-க்கு ரூ 1-0-0
வெளிநாடுகளுக்கு தபாற்கூலி உள்பட வருடம் 1-க்கு ரூ 1-4-0

விலாசம்:—
வி. இராஜய்யா நாடார்,
புரொப்ரைட்டர் & பப்ளிஷர்
"நாடார் நண்பன்" ஆபீஸ்
நெய்யாற்றின்கரைதென்திருவிதாங்கூர்

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## ஸ்ரீ கிருஷ்ணலீலை

(விராபாமுலி எழுதுகிறார்.)

### ஸ்ரீ கிருஷ்ணன் ஜெனனம்.

முன் தொடர்ச்சி.

ஆவணி மாதம் கிருஷ்ணபட்சத்து அஷ்டமி திதிரோகிணி நட்சத்திரத்திலே, தோஷரகிதமான தினத்தில் நவக்கிரகங்கள் உத்தபஸ்தானங்களில் வந்து நிற்க, எட்டுத்திக்குகளிலும் மங்கள வாத்திய மொலிக்க, சகலநதிகளும் தெளிந்து குளிர்ச்சியான காற்றுகளை வீச சாதுக்கள் மனங்களிக்க ஆகாயத்தில் கந்திருவர்கானஞ் செய்ய தேவர்கள் புட்பமாரி பொழிய, ரிஷிகள் மங்களவசனங் கூற இராத்திரிக்காலத்தில் தேவகி தேவியினிடத்தில் சர்வதயாபரனான ஸ்ரீகிருஷ்ணபகவான் பூரணச் சந்திரன் போன்ற கண்களும் சதுர்ப்புஜமும் பஞ்சாயுதமும் கண்டத்திற் கௌஸ்துவாபரணமும் அரைமானிற் பீதாம்பரமும் அணிந்து நீலமேக வண்ணராய் நவரத்தின கசித கிரீடகுண்டல கவசம் மோதிரம் கடகம் முத்துச்சரமுதலிய திவ்வியாபரணங்களணிந்த திவ்விய சரீரத்துடன் அவதாரஞ் செய்தார்.

வசுதேவர் அளவிலா ஆனந்தங் கொண்டு கருணையுடன் அவதரித்த ஸ்ரீமந் நாராயணனை சாஷ்டாங்கமாய்ப் பணிந்து சுவாமியை நோக்கி ஓ மகானுபாவரே தேவரீருடைய மாய்கையால் அடியேன்மறைந்திருந்தாலும், இப்போது நீர் சிசுக்களைப் போலிராமல் தேவர்களும் அறிதற்கரிதான திருக்கோலத்துடன் அவதாரம் செய்திருப்பதால் நீர் ஸ்ரீ பகவானென்று, அறிந்துகொண்டேன். ஆனல்,

உலகங்களை சிருஷ்டி செய்யும் ரஜோகுணமான சிவப்புநிறத்தையும் இரட்சிக்கவேண்டிய சத்துவகுணமான வெண்மை பொருந்திய சரீரத்தையும் கொண்ட,தாம் இப்போது சங்கரிக்க வேண்டிய தமோகுணப்பிரதானமானஸ்ரீ கிருஷ்ண (நீலம்) ரூபத்தைத் தரித்தீர். இப்படிப்பட்ட தெய்வீகமான பலத்துடன் கூடியிருந்தாலும் தேவரீர் தேவகி கர்ப்பத்தில் எப்போது அவதரிக்கப் போகிறீர் என்று எதிர்பார்த்திருக்கிற கம்ஸன் கேட்டால் இந்த க்ஷணத்திலேஉக்ரமான ஆயுதந்தாங்கிக் கொல்ல ஓடிவருவானே என்று நடு நடுங்கிச் சொல்லிமுடித்தார்.

ஆறு பிள்ளைகளையும் பறிகொடுத்த பதட்டத்தை கண்ட பகவான் அஞ்சேலெனச் சொல்லி, தேவகி தேவியைப் பார்த்துப் பின்னும் பேசுகிறார். அந்தப் பூமியை சுவாயம்பு மனுவான் ஆளும்போது பிரசனியெனும் பெயரையுடைய நீயும்,சுதசெனென்றுபெயரையுடைய வசுதேவரும் களங்கமற்றவர்களாய் சருகையும்காற்றையும்புசித்துமகா உபசாந்த இந்திரிய முடையவர்களாய் பன்னிராயிரந்தேவவருடம் தவஞ்செய்தீர்கள். உங்களிடத்தில் அன்பு கொண்டு அப்போது பிரத்தியட்சமான என்னை மோட்சத்தை விரும்பாமல் மாய்கையால் என்னைப் புத்திரனைகப் பிறக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டபடிக்கு வரங்கொடுத்தேன். அப்போதே உங்களிடத்தில் பிரசனி கற்பனை அவதரித்தேன் அதன்பின்காசிபரும்அதிதியுமான உங்களிடத்தில், உபேந்திரனைஅவதரித்தேன்.இப்போது உங்களுக்கு முன் ஜென்ம ஞாபகம் வருவதற்காக இந்த ரூபமடைந்தேன். இந்த ஜென்மத்தில் என்னைப் புத்திரனைவும் யீசுரனைவும் பாவனை பண்ணி மோட்ச மடையப் போகிறீர்களென்று சொல்லி தேவகி பார்த்திருக்கும்போதே சாதாரண சிசுவாக விளங்கினர்.

அப்போது கோகுலத்தில் யசோதைக்கு, மாய்கை பெண்ணைப் பிறந்தாள். அந்தச் சமயத்தில் முன்னே பகவானுல் ஆக்ஞாபித்தபடி வசுதேவர் தம்முடைய சிசுவை யசோதைக்குப் பிள்ளையாகக் கொண்டுபோய் வைத்து அவள் பெற்ற பெண்ணைத் தானெடுத்து வரயத்தனிக்க, தாம்காவலுக்குட்பட்டிருக்கிற கதவுகளும் அதைச் சுற்றியுள்ள கதவுகளும் இரும்பினுற் பின்னி உழல்மரம் போட்டு பத்திரப்படுத்தியிருந்தும், அந்தயோக மாய்கையின் பலத்தால் பூட்டுகள் திறந்து கால்விலங்குகளும் கழன்று விட்டது. சகல காவலாளிகளும், சவத்தைப்போல் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது கொஞ்சம் மழையும் பெய்தது. வசுதேவர் இதுதான் ஏற்றசமயமென்று சுவாமியான சிசுவைதூக்கிக் கொண்டு யமுனையாற்றைக் கடந்து கோகிலத்திற் சென்று கோபிகைகளெல்லாந்தூங்குகிற நேரம் பார்த்து தன்புத்திரனை (கிருஷ்ணனை) யசோதை யிடத்தில் அவள் தனக்கு பிள்ளைதான் பிறந்ததென்று எண்ணும்படி வைத்துவிட்டு அவள் பெற்றபெண் குழந்தையை எடுத்துக் கொண்டு மகா வேகத்துடன் ஒருவரும் அறியாமல் ஓடோடியும் வந்து பெண்குழந்தையை தேவகி சயனத்தில் வைத்துப் போட்டு தாம் பழையபடி இருந்து கொண்டார்.

கம்ஸன், மாயையால்மயங்கினன் பிறகு தேவகி முன்கொண்டு வந்து வைக்கப்பட்ட பெண்குழந்தை அழுகிற சப்தத்தைக் கேட்ட காவலாளிகள் வெகு துரிதமாய்ச் சென்று கம்ஸனிடம் தேவகிக்கு பிள்ளைபிறந்திருக்கிற தென்று சேதி சொல்ல அவன் தனது சயனத்திலிருந்து எழுந்து இச்சிசு தனக்கு எமன் என்றெண்ணிக் கொண்டு தேவகி இருக்கின்ற வீட்டைநாடி வருகையில், வழியிற்றடுக்கி வீழ்ந்து முடிகலைந்து மூர்க்ககோபா வேஷத்துடன் சமீபத்தில் வந்து நிற்கிறகம்ஸனை நோக்கி, தேவகியானவள்,அண்ணு இதற்கு முன் என் பிள்ளை ஆறுபேர்களையும் கொன்றீர். எனக்குப் பிள்ளையாசை பேராசையாயிருக்கிறது. இப்போது எனக்கு ஓர் பெண்குழந்தை பிறந்திருக்கிறது. இதை யாவது தந்து என் குறையை நிவர்த்தி செய்யவேணு மென்று வஸ்திரத்தால் அச்சிசுவை மூடிக்கொண்டு பிரார்த்திக்க அவளை அதட்டி தன் பிராணனைக்காப்பாற்றும் நிமித்தம் கையிலிருந்த சிசுவைப் பிடுங்கி இரண்டுகால்களையும் பிடித்து கல்லின் மேல் மோதியடிக்க எத்தனம்செய்யும்போது, அச்சிசு அவன் கையை விட்டு அவன் தோழிலோர் உதையுங் கொடுத்து ஆகாயத்திலெழும்பி ஆயுதங் கொண்ட எட்டுக்கைகளுடன்,அடா அரசனேஎன்னை நீ, பாறைமீது மோதுவதெதற்கு, உன்னை எதிர்த்துக் கொல்ல வேண்டியவன் புதிய நிலாவைப் போல் ஒரு வகையாய்ப் பிறந்து ஒருவன் வளர்ந்து வருகிறு னென்று சொல்லி மறைந்தது. தேவகியும் வசுதேவரும் கம்ஸனும் இது ஈசுர சங்கல்ப்ப மென்று ஒருவரை ஒருவர் தட்டிக் கொண்டு சுகித்திருக்கும் நாளில் கம்ஸனுடைய மனேவிருத்தியால் பயம் அதிகப்பட்டு தனக்கு சாவுவரப் போகிறதே அதை எப்படியும் நிவர்த்திக்க வேண்டுமே யென்று மந்திரி பிரதானிகளைக் கூட்டி வைத்து யோசித்து முடிவில் ஸ்ரீ கிருஷ்ணனைக் கொல்லும்பொருட்டு ஊரிலுள்ள குழந்தைகளைக் கொல்லும்படி அவர்கள் தீர்மானித்தார்கள்.

கிருஷ்ணன் முற்கால தற்கால பிற்கால நடத்தைகளை பால்யத்தில் பகர்ந்ததும் சிசுவாகவும், பகவத் சொரூபமாகவும், காட்டியது தாம் செய்த யோகாப்பியா சத்தினுடைய வல்லமையும், தன்னலமற்ற சாத்வீகக்கருணைப் பிரவாகமுமேயாம். நாம்ஒருவேலையிலிருக்கும்போது நமக்கு மற்றெதும் ஞாபகத்துக்கு வருவதில்லை. செய்யும் வேலையைவிட்டு 40-வருஷத்துக்குமுன் நாம் சென்ற மற்றொரு தேசத்துச் சம்பவங்களென்ன வென்று ஆலோசித்துப் பார்த்தால் எல்லாம் ஒன்றின்பின் னென்றாக ஞாபகத்துக்கு வருகிறது. அதுபோலவே முன் ஜென்மத்தில் நடத்திய கிருத்தியங்களெல்லாம் நம்மிருதயமான சமுத்திரத்தில் மிகஆளமான இடத்தில் பந்தத்தால் மறைந்து கிடக்கிறது. அதற்கு வேண்டிய பிரயத்தனம் பண்ணி பிரயாசைப் பட்டுப் பார்த்தால் நாமும் இந்தக்காலத்தில் முன் ஜெனனகால வர்த்தமானங்களையும் அறியலாம் அறியுஞ் சக்தியை அறிவால் குருவால் அறிந்து கொள்ளலாம் தாயினுடைய கெர்பத்திலிருக்கும்போ தெல்லாம் பூர்வக்ஞானமுடையதாயும் பூமியில் இறங்கியவுடன் மாயைசம்பந்தப்பட்டு பூர்வீகவர்த்தமானங்களை மறந்துவிடுமென்பதே வேதக்கருத்து.

தொடரும்.

---

## குடியைப்பற்றிய குறிப்புகள்.

பாரீஸ் பட்டணத்தின் மிலிட்டேரி சமாண்டர் மதுபானம் குடிப்பதனுல் விளையும் தீங்குகளை விபரித்துத் துண்டுப் பத்திரிகைகள் ஏற்படுத்தி, ஒவ்வொரு பாரக்ஸிலும் வைத்து வைக்க உத்திரவளித்திருக்கின்றனராம். இதில் ஒருபக்கம் குடிக்கிறவனுடைய உள் உறுப்புகளையும், மறு பக்கம் குடியாதவனுடைய உள் உறுப்புகளையும், காட்டும்படியான படங்கள் காட்டியிருக்கிறதாம். குடியைப் போக்க இது ஓர் நல்ல உபாயமே.

∴

சீமையில் ஒருவன் தன் பெண்சாதியை 6-மாதம் சிறையில் வைத்த நியாயாதிபதிக்குத் தன் நன்றியறிதலைக்காட்ட வேண்டி ஓர் கடிதம் எழுதினன். அதில் ஐயா நீர் என்பெண்சாதி குடித்து நிலைமறந்ததற்காகப் பலமுறை அபராதத் தண்டனை விதித்தீர். அவள் திருந்தவில்லை கடைசியாக 6-மாதம் கடுஞ் சிறையில் வைத்ததால் குடியை விட்டு விட்டாள். இப்போது நல்ல நடத்தையுடனிருக்கிறுள் இதற்காக என்னுடைய வந்தனத்தை ஏற்றுக்கொள்ளக் கோருகிறேன் என்று கண்டிருந்தது.

∴

இங்கிலாந்தின் ஜனத் தொகை 33763434-குடிவகையால் நேர்ந்த செலவு 140366542-பவுன். இதனுல் ஒரு ஆளுக்குச்செலவு 4-பவுன். 3-ஷிலிங் 2-பென்ஸ். ஸ்காட்லாண்டின் ஜனத் தொகை. 4627656. குடிவகையில் செலவிட்ட தொகை 14804305-பவுன் ஒரு ஆளுக்குச் சென்ற செலவு 3-பவுன் 4 ஷிலிங் அயர்லாண்டின் ஜனம் 4398642, குடிவகைக்குச் செலவிட்டத் தொகை 13816318 பவுன் ஆளொன்றுக்கு நேர்ந்த செலவு 3 பவுன் 2 ஷிலிங் 10 பென்சு.

∴

பாடியாலா சமஸ்தானத்துப் படையார் அப்படையின் சேனாதிபதியின் கீழ் கூடிய சபையில் மகந்து என்பவர் சீக்கிய வேதங்களின் உண்மைகளைப் படையோருக்குப் பிரசங்கத்தில், அவ்வேதங்களில் மதுபானம் செய்கல் முற்றிலும் தடுக்கப்பட்டிருக்கிற தென்பதைப்பற்றி எடுத்துக்கூறினர். சீக்கியக் குருக்களின் சமயத்தார் யாவரும் மதுபானம் செய்யலாகாதென்பதை இவர் தெளிவாகஎடுத்துக்காட்டினர். பிறகு, சர்னல் சதர்தா வில் என்பவரின் பிரேரணையின்பேரில் சீக்கிய மதுவிலக்குச் சங்கமொன்று ஏற்படுத்தப்பட்டது. பாடியாலா சமஸ்தானத்துப் படையிலுள்ள அநேகம் உத்தியோகஸ்தர்கள் இனி மதுபானம் செய்வதில்லை யெனப் பிரதிக்ஞை செய்துகொண்டார்கள்.

∴

பௌரங்பேட்டில் சில குடிகாரர்கள் ஒன்று சேர்ந்து அவ்விடமுள்ள ஆப்காரி கமிஷனரிடம் அடியில் வருமாறு மனு செய்து கொண்டர்களாம்:—"இப்போது தயாராகி விற்கப்படும் நாட்டுச் சாராயம் ஜலக்கலப்பால் வேண்டியவளவு லாஹறி உண்டு பண்ணக்கூடவில்லை. முன்னெல்லாம் மேற்படி சாராயத்தில் 2-டிராம் சாப்பிட்டாலும் தலை சுற்றியாடும். இப்பொழுதோ பணத்தைச்செலவழித்து ஒரு குவார்டு பாட்டில் சாராயம் சாப்பிட்டாலும் மயக்கம் கிடையாதே அந்தோ! என்ன அநீதிஇது என்று மனுச்செய்து கொண்டார்களாம்.

∴

துருக்கிதேச சுல்தானவர்கள் சாராயக்கடை விஷயத்தைப்பற்றி ஓர் சட்டம் பிறப்பித்திருக்கின்றனர். அதாவது ஓர் முஸல்மான் சாராயக்கடையில் நிற்கக் கண்டால் அவனை உடனே அவ்விடத்தினின்றும் போகும்படி போலீசார் சொல்லவேண்டியது அவன் மறுத்தால் அவனைச் சார்ஜ் செய்து தண்டனைக்குட்படுத்தவேண்டும். முஸ்லீம்களுக்கு புத்திமயக்க குடியை மதுபானக்கடை வைத்திருப்பவன் விற்கக்கூடாது. விற்பானுகில் கடைக்காரன் ஆக்கினைக்குட்படுத்தப் படுவானென்பதுமாத்திரமல்ல, இனி இவனுக்கு ஒரு காலத்திலும் அப்படிப்பட்ட தொழிலைச் செய்யக்கிடைக்காதாம்.

∴

பாரீஸ் நகரத்தில் ஒரு தேக தத்துவ நிபுணராகிய கரோபானட் என்பவர் பல மிருகங்களுக்குச் சாராயம் முதலான பல விதமான குடி மயக்கங்கள் கொடுத்துப் பரிசோதித்துப் பார்த்தார். அப்போதவர் கண்டுகொண்டது என்னவென்றால், ஒரு மிருகத்துக்கு சுமாராய் சாராயம் கொடுத்துவிட்டால் முதலில் அது வெகு குசாலாய் இருக்கிறது. பிறகு வெகு விசனப்படுவதாய்க் காணப்படுகிறது. பிறகு வெகு பயபக்தியாயிருக்கிறதாக காண்பித்துக் கொள்கிறது. குடி அதிகமாய் விட்டால் மயக்கமும் அதிகமாகி இறந்துபோய்விடுகிறதாம். முயல்கள் குடி மயக்கத்தால் வெகு வேடிக்கையாய் நடந்து கொள்ளுகின்றன. சினை மிருகங்கள் குடி மயக்கத்தால் யாரையும் பார்த்துக் கத்திக் கடிக்கின்றனவாம் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

சு. மி.

---

சந்தா நேயர்களுக்கு,

## அறிவிப்பு.

நமது, பத்திராதிப ரவர்களின் புத்திரியின்விவாகத்தை முன்னிட்டு, நமது காரியலாயத்தில் மூன்றுநாள் விடுமுறை விடப்பட்டிருந்தது. அதனிமித்தம், மித்திரனை குறிப்பிட்ட காலத்தில் வெளியிட சிறிது காலதாமதம் ஏற்பட்டது.

மானேஜர்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## பஹிஷ்கரியுங்கள்,

நமது மகாஜன சங்கம் தூத்துக்குடியிலும், சாத்தூரிலும் முறையே கூடிய 6, 7வது கான்பரன்ஸ்களில் “நம்ஜாதிக்குரிய தல்லாத கள்ளிறக்கும் தொழிலில் நம்மவர்களில் சிலர் பிரவேசித்திருப்பதால் அதை அறவே யொழிக்கவேண்டுமென்னுந்தீர்மான மொன்று நிறைவேறியிருந்தது அதற் கேற்ப சங்கத்திலிருந்து, சர்குலர்களையும், பிரசாரகர்களையும் வெளியேற்றி ஜனங்களிடம் ஷை தீர்மானத்தை பரவச்செய்தும், வந்ததில் பல இடங்களில் குலாபிமானிகள் நியாயத்தை யுணர்ந்து அவ்வண்ணமே நிறுத்தியிருக்கிறார்கள்.

ஆனால் சில குக்கிராமங்களிலுள்ள நம்மவர்கள் மேல் வருஷங்களில் ஷை தொழிலை நிறுத்தியதின் பயனுக பொறுமையாலோ அல்லது, அறியாமையாலோ, சிற்சில துராலோசனையாளர்களாலும், சலால் கீழ்தா உத்தியோகஸ்தர்களாலும் மிககசுக் குண்டு பணந்தேறி பிடித்தபிடியை விடாமல் குலதர்மத்தைக் கைப்பிடித் தொழுகி வருகிறார்கள். ஆயினும் சில இடங்களில் உள்ளவர்கள் நீர்மேர் குமிழியொத்தபணத்தினுசையாலோ சங்கத்தீர்மானத்தை அறிந்தும், தீர்க்க ஆலோசியாமலோ, மேல் சொல்லியவர்களின் மிரட்டுக்கஞ்சியோ ஷை தொழிலைக் கையாண்டு வருகிறார்கள்.

“சிவகாசியில் இவ்வருடத்தில் கூடிய 8-வது மஹா நாட்டிலும், ஷை தீர்மானம் ஏகசம்மதமாய் நிறைவேறியது. தவிரவும் வெளிப் பிரசங்கங்களில், பத்திராதிபர்கள் மூவரும் குலாபிமானிகள் பலரும் உருக்கமாயும், தெளிவாயும், பரிதாபமாயும் கூறிய விஷயங்களை கேரில்லேனும் ஒருவர் சொல்ல வேணும் தெரிந்தவர்கள் ஷை தொழிலைச்செய்யமனம் ஒவ்வுவார்களா !

இவ்வருடம் கள்க்கடை எலமெடுத்துக் கொண்டு வந்த ஒருவரிடத்தில் “குத்தகை எடுத்தது சங்கத்திற்கு முற்றிலும் விரோதமல்லவா” என்று கேட்டதற்கு அன்னார், “கையிற்பணமில்லாதவர்கள் குத்தகை எடுக்க வில்லை, நான் ஏன் எடுக்கப்படாது? ” என மறுமொழி கூறியுள்ளார், என்னே இவர்தம் அறியாமை ! என்னே விபரீதம்!! இவரைப்போன்ற மனிதர்கள் மகாநாடு கூடுமிடத்து வந்து, ஆங்கு வழியும் குலாபிமானப் பெருக்குகளையும நடக்கும் ஒவ்வொரு காரியங்களையும், அறிந்தனராயின் இப்படிக் கூற மனந்துணிவரோ? ஈசா நின் கருணை இன்னார்பால் இருந்ததுவுந்தானென்னே !

மானிடப் பிறப்பின் மர்மத்தை யறியாது உலக மாய்கையில் சிக்குண்டுழலும் முற்கூறிய வியாபாரி செப்பிய புண்சொற்களை உரைக்கும் நிபுணர்சிலர் இருப்பினும் அன்னார் விஷமச் சொற்களைத் திரும்பினுஞ் சிறிதாய் நினையுங்கள். நாடார்குல மித்திரன் பத்திராதிபரவர்கள் சிவகாசியில் நமக்கு முன்னிலையிற் கூறிய கள் பஹிஷ்கார விஷயமான பரிதாப மொழிகளை மறந்து விடாமல், ஒவ்வொருவர் இருதயத்திலும் பதிவு செய்யுங்கள். இத்தொழிலைநிறுத்திவிட்டால் பிறிதொரு தொழில்கிடையாதா? என்றஊக்கத்தை தளரவிடாமல்ஷை தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவந்து, நிறைவேற்றுங்கள். ஆனல் நற்காரியங்களுக் கிடையூறு

# நாடார் மகாஜன சங்கமும், பிரசாரமும்.

### சின்னமனூர்.

11-8-22-ல் மகாஜன சங்கம் பிரசாரகர் ஸ்ரீமான் தி. கருப்பையா பிள்ளை யவர்களின் தலைமையின் கீழ் இச்சங்கத்தின் 29-வது மீட்டிங்கூடிற்று அவ்வமயம் ஆறுகனவான்கள் அரிய பெரிய உபந்யாசம் செய்தார்கள். அக்கிராசனரவர்கள் தமது முகவுரை முடிவுரையில், நமது ஜனசமூக நிர்மாணத்திட்டத்தின் அவசியத்தைப் பற்றியெடுத்துரைத்தபின் வந்தனோபசாரத்துடன் சபை இனிது கலைந்ததென்று காரியதரிசி அறிவிக்கிறார்.

* * *

### ஆண்டிபட்டி.

இவ்வூருக்கு நமது மகாஜன சங்கம், கௌரவ பிரசாரகர் ஸ்ரீமான் தி. கருப்பையா பிள்ளை யவர்கள், 3-8-22ல் விஜயஞ்செய்து உபந்நியாசம் நடைபெற்றது. மெம்பர் சேர்த்தல், சந்தாவசூலித்தல், தலைக்கட்டுவரி வசூலித்தல், பத்திரிகை வாங்குதல் முதலிய விஷயங்களில் அதிக தீவிரமாக வேலை நடந்தது என்று S. R. நாடார் அறிவிக்கிறார்.

* * *

### தேங்கைகோண்டான்.

இவ்வூருக்கு 7-8-22 தேதியில் நாடார் மகாஜன சங்கம் பிரசாரகர் மகா-௱-௱-ஸ்ரீ K. M. கோபால்சாமி நாடாரவர்கள் விஜயஞ் செய்தார்கள். அன்றிரவு ஒரு பொது மீட்டிங்கூடியது. அவ்வமயம் பிரசாரகர் நாடார் மகாஜன சங்கமும் நமது கடமையும் மென்ற விஷயத்தைப் பற்றி வெகு சாங்கோபசாங்கமாய் உபந்நியாசித்தார்கள். ராஜகீதம் பாடப்பெற்று சபைமங்களகரமாய்நிறைவேறி மறுதினம் தெங்கைகொண்டானில்நமசங்கத்தின் தீர்மானமாகிய தலைக்கட்டுவரி ரூ 21. ம் வசூலித்து ஷை ரூபாயை கனம் பிரசாரகரவர்களிடம கொடுத்து சங்கத்தின் ரசீது பெற்றிருக்கிறோமென்று ஸ்ரீமான் பெ. மு. கொல்லிமலைநாடார எழுதுகிறார்.

* * *

### பெருமாள்கோவில்.

இவ்வூருக்கு 13-8-22ல் நாடார் மகாஜன சங்கம் பிரசாரகர் ஸ்ரீமான், K. M. கோபால்சாமி நாடாரவர்கள் விஜயம் செய்தார்கள். அன்னவரை உபசரித்து அன்றிரவும் மறுதினமும் அம்மன் சந்நிதிக்கிமுன் மகா--௱-௱--ஸ்ரீ அம்பலம் ப. ஆழ்வார் நாடார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஒரு பொது மீட்டிங்குகூடியது. அவ்வமயம் கனம் பிரசாரகர், ஒற்றுமை, கல்வி, ஒழுக்கங்களுக் கேதுவான உபந்நியாசம் செய்து மறுநாள் ஒற்றுமை இல்லாதிருந்த இவ்வூரில் ஒற்றுமை யேற்படுத்தி புதிதாய் (க்ஷத்திரியகுல நாடார் தருமபரிபாலன ஐக்கிய சங்கம்) ஒன்று நியமித்து அதற்கு உத்தியோகஸ்தர்கள் 9-பேர்களை நியமித்தும், கிளைச்சங்கம் நடந்து வருகிறது. தவிர மகாஜன சங்கத்திறகு அங்கத்தினர்களாக 7-அபிமானிகள் சேர்ந்தும் மேல்க்கண்ட ரூ 7ம் கனம்கோபால்சாமி நாடாரிடம் கொடுத்துசங்கம் ரசீது பெற்றிருக்கிறோம் என்று ச. நல்லதம்பி நாடார எழுதுகிறார்

---

கப்பல அசந்தர்ப்பங்கள் ஏற்படுவது சகஜம். அதைப்பொருட் படுத்தாமல் உறுதிபாய் நடப்பீர்களானல் க்ஷத்திரிய இரத்தத்தில் உதித்தவர் ஆவீர்கள்.

ச. சி. இராமய்யா நாடார்,
கடலாடி.

### திருப்பூவனம்.

இவ்வூருக்கு நம் நாடார் மகாஜன சங்கம் பிரசாரகர் கனம K. M கோபால்சாமி நாடார் அவர்கள் 23-8-22 ல் விஜயஞ் செய்தார்கள் அன்னவரை வரவேற்று அன்றிரவு ஓர் மீட்டிங் கூடியது. மறுதினத்தில் சங்கத்திற்கு அங்கத்தினர்களாக 4 அபிமானிகள் சேர்ந்தும் மேல்கண்ட ரூபாய் 4-ம் மிஸ்டர் கோபால்சாமி நாடாரிடம் கொடுத்து சங்கரசீது பெற்றிருக்கிறோம். தவிர தலைக்கட்டுவரி அடுத்தவாரம் வசூலித்து சங்கத்திற்கு அனுப்புவதாக உறைவின் முறையில் தீர்மானம் செய்திருக்கிறார்களென்று ஸ்ரீமான் P. S. பாண்டியநாடார் எழுதுகிறார்.

* * *

### கீழாய்க்குடி.

இவ்வூருக்கு 11-8-22 ல் நமது நாடார் மகாஜன சங்கப்பிரசாரகர் கனம் K. M. கோபால்சாமி நாடாரவர்கள் விஜயஞ் செய்தார்கள். அன்றிரவு சுமார் 8 மணிக்கு ஆற்றின் மணல்மேட்டின்கண் ஒருபொதுமீட்டிங்கூடியது. இவ்வூரில்தலைக்கட்டுவரி ரூ 9ம் லெக்ஷிமணநாடார் குடியிருப்பில் தலைக்கட்டுவரிரூ 5ம் வசூலித்தும் ஆக ரூ 14ம் ஸ்ரீமான் கோபால்சாமி நாடாரிடம் கொடுத்து சங்கத்தின் ரசீது பெற்றிருக்கிறோம் என்று மு. ரா. து. வெ. கண்ணு நாடார் அறிவிக்கிறார்.

* * *

### நாடார் மகாஜன சங்கம் மதுரை.

### தேவை.

சங்கத்தின் நோக்கங்களைப் பரவச்செய்வதற்கு அபிமானமும் ஆற்றலுமுள்ள நாடார் பிரசாரகர் மூன்று பெயர்களும், தமிழ், இங்கிலீஷ், இதுகளில் தேர்ச்சியுள்ள நாடார் காஸ்பாண்டென்ஸ் கிளர்க்கு ஒருவரும், சங்கம் வேலைகளைப் பொருப்பாய்ப் பார்த்துக்கொள்ளக்கூடியதிறமையும்அனுபவமுமுள்ள ஹெட் கிளார்க்குஒருவரும்தேவை. பிரசாரகர்களுக்கு ரூ 20 முதல் 25 ம், காஸ்பாண்டென்ஸ் கிளார்க்குக்கு ரூ 25 முதல் 30-ம் ஹெட்கிளார்க்குக்கு ரூ 40 முதல் 60-ம் சம்பளம் கொடுக்கப்படும். காரியதரிஸிகளுக்கு எழுதவும்.

காரியதரிஸிகள்.
நாடார் மஹாஜன சங்கம்
ஆபீஸ்:- 221 கீழமாரட்டுத்தெரு
மதுரை.

* * *

### நாடார் மகாஜன சங்கம் ஆபீஸ்மாற்றுதல்.

நாடார் மஹாஜன சங்கம் ஆபீஸ் தளவாய்க்கிரும் 50 நிர் கட்டடத்திலிருந்ததை இப்போது கீழமாரட்டு வீதி, 221-நிர் கட்டடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிற தென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

காரியதரிசிகள்.

* * *

### ஸ்காலர்ஷிப்.

16-8-21 ல் மதுரையில் சங்கம் ஆபீஸில் கூடிய கவுன்ஸில் மீட்டிங்கின் தீர்மானத்தின்படி, வேலூரில் ஊர் ஹிஸ் காலேஜில் இண்டர்மிடியட் சீனியர்வகுப்பில் வாசித்துவரும் V. கனகசபாபதிக்கு 1-9-22 முதல் ரூ 15-ம்

4-2-22 ல் மதுரையில் சங்கம் ஆபீஸில் கூடிய கவுன்ஸில் மீட்டிங்கில் ஹைஸ்கூல்களிலும் வாசித்து வரும் நமது குல ஏழை மாணவர்களில் ஆறு பையன்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்க காரியதரிசிகளுக்கு கொடுக்கப்பட்ட அனுமதியின் படி அடியிற்கண்ட மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் 1-7-22 முதல் கொடுக்கப்பட்டு வருகிறது.

1. V இராஜமணி ஸ்கூல் பைனல்கிளாஸ் இந்துநாடார்எட்வர்ட் ஹைஸ்கூல், சிவகாசி, ரூ 10.
2. P எபினேஸர், இன்டர்மிடியட் ஜூனியர் வகுப்பு சி.எம். காலேஜ் திருநெல்வேலி ரூ 15.
3. D பால்வர்மா, இண்டர்மிடியட் ஜூனியர்வகுப்பு, சி. எம். காலேஜ் திருநெல்வேலி ரூ 15.
4. K நடேசன் இண்டர்மெடியட் ஜூனியர் வகுப்பு அமெரிக்கன் காலேஜ் மதுரை. ரூ 15.

## சகோதரத்துவம்,

சகோதர சகோதரிகளே !

சகோதர சகோதரிகளே என்று ஒவ்வொருவரும் தன்தன் பிரசங்கத்திற்கு முன்னங்கமாய் எடுத்துக் கொள்ளுகின்றார்களே, எப்படி சகோதரத்துவ முண்டாகும், நமது தாய்நாட்டில் பல சாதிகளாயும், பல தாய் வயிற்றினிலும், அவதரித்துள்ளோமே எங்ஙனம் சகோதரத்துவம் பொருந்தும் றென சிலர் தப்பபிப் பிராயம் கொள்கின்றார்கள். அச்சந்தேக நிவர்த்தியை விளங்க விளம்ப எம்மனமானது மகிழ்ச்சி மிகவுற்றிற்று. இங்ஙனம் “சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்” என்பதுபோல் சகோதரத்துவத்தை சொற்பொழிவுடன் சுருக்கமாய் வரைவாம்.

உலகத்திற்கே அவதார புருஷராயவதரித்துள்ள “மஹாத்மாகாந்தி” அவர்களின் கிருபையாலும், அன்னாருடைய பொறுமையாலும், நமது தாய்நாடு “நேத்திரம்” கண்விழித்துக்கொண்டது. மேலும் நமது தாய்நாட்டில் சகோதரத்துவமெழுந்தன. மேல் நாட்டினர் அடக்குமுறை சட்டத்தால் நமது நாட்டில் சகோதரத்துவம் வரவர வளர்ந்தோங்கிற்று. இனி ஒவ்வொரு இந்திய மக்களின் மனதை சகோதரத்துவ வழியிற்திருப்புமென்பதிற் சிறிதும் ஐயமின்ரும்.

நமது தாய்நாட்டிற் பிறந்த இந்திய மக்களை ஏன் சகோதரத்துவம் பாராட்டக் கூடாது? எம்மதமும் சம்மத மென “மஹாத்மா” வும் போதித்துள்ளார் இல்லைதக் கடைப்பிடிப்பது நம்மனோர் கடமையன்றோ? கடவுளு மொன்று குலமுமொன்று, உயிருமொன்று, என்பதைக்கவனிக்குமிடத்து ஒரே தாய் நாட்டிற் பிறந்த நாம் ஏன் சகோதரத்துவம் கொண்டாடப் படாது. இதுவும் நாம் தற்கால நாகரீகத்தை செவ்வனே அறியாமையே யன்றி வேறொன்று மில்லை யென்பது துணிபு.

சகோதர சகோதரிகளே !

இனியேனும் இதுவரையிலும் கண்ணுறங்கி நாட்டைப் பாழடையச் செய்தது போலாமல் கண் விழித்து நமது தாய் நாட்டை அன்னிய நாடுகளைப் போல் துலங்கச் செய்ய எல்லாம் வல்ல இறைவன் கருணை பாலிப்பாராக சுபம்.

எஸ். கே. கோவிந்தசாமி பிள்ளை,
மங்களலூர்.

## ஐயவினா ?

நண்பர்காள் !

வைத்திய சாஸ்திரத்தில் ஆயுள் வேதம், யூனானி என்று வழங்கி வருகின்றதின் தார்ப்பரியம் அறிய வேண்டுமாதலின் அதன் உட்பொருளை மிக்கதெளிவாக இம் மித்திரன் அங்கத்தில் தனது சந்தேகத்தை நிவர்த்திக்கவேண்டுமென ஒரு நேயர் விரும்புகிறார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

நாடார்குல மித்திரன்
துந்துபி௵ ஆவணிமீ 26௳

நாடார் மகாஜனசங்கம்
மதுரை.

# 1921ம் வருஷத்திய ரிப்போர்ட்டு.

நமது நாடார்மகாஜனசங்கத்தின் 1921-ம் வருஷத்தியரிப்போர்ட்டை சிவகாசியில் கூடிய 8-வது கான்பரன்ஸ்பந்தலில் 28-7-22 காலை 10 மணிக்கு ஸ்ரீமான் S பொன்னைய நாடாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூடிய ஜெனரல் மீட்டிங்கில், காரியதரிசி கனம் பழனிச்சாமிநாடாரவர்களால்வாசிக்கப்பட்ட முழுவிபரத்தையும், கடந்த இரு சஞ்சிகையிலிருந்தே மற்றொரு பிடத்தில் பிரசுரித்து வருகிறோம். முந்தின வருஷத்திய ரிப்போர்ட்டுகளைக்காட்டிலும் பிரஸ்தாப வருஷத்திய ரிப்போர்ட்டு மிகவும் திருப்திகரமா யிருக்கிறதாயினும், காரியதரிசிகளும் மகாஜனசங்க நிர்வாக உத்தியோகஸ்தர்களும் எதிர்பார்த்தபடி போதியளவு திருப்திகரமாயில்லை என்று, அவர்களால் தயாரிக்கப்பட்ட ரிப்போர்ட்டிலிருந்தே தெரியவருகிறது.

நமது மகாஜனசங்கப் பிரஸ்தாப வருஷத்திய ரிப்போர்ட்டை நன்கு கவனிக்குமளவில் மகாஜனசங்க உத்தியோகஸ்தர்கள் ஆரம்பம் முதல் நிர்வாகத் திட்டமொன்று தயார்செய்தே, மிகவும் திறமையுடனும், பொறுப்புடனும் வேலை செய்து வந்திருக்கிறார்கள் என்பது எளிதில் விளங்கும்.

எவ்வளவுதிறமையுடனும் விழிப்புடனும் ஜாக்கிரதையாய் பெரிய தோர்தோரணையிலுள்ள ஓர்நிர்வாகத்தை நடத்த முற்படும்போது,சிற்சில அற்ப அசந்தர்ப்பங்களால் நாம் எதிர்பார்த்தபடிநிர்வாகத்தின் பூராதிட்டமும் பூர்த்திபெறுமலிருப்பதுமுண்டு. இதுபற்றி யாதொரு மனத்தாங்கலும் கொள்ளாமல் நிர்வாகிகள் விட்டுப்போனதிட்டத்தின் அம்சங்களையும்திருத்திக்கொண்டு, புதிய திட்டங்களின் அம்சங்களையும் சரிவரத் தயாரித்து நம் மகாஜனங்களுக்குள் புதியகிளர்ச்சிகளும், முயற்சிகளும், உண்டாகுமாறு நிர்வாகத்தை நடத்திக்கொண்டு வரவேண்டு மென்பதே நமது பிரார்த்தனை.

பிரஸ்தாப வருஷத்திய ரிப்போர்டின்படி, மேமீ 31௳ முடிய 2156 பேர்கள் நமது மகாஜனசங்கத்திற்கு அங்கத்தினர்களாக இருக்கிறார்களாம்.

பத்துலட்சம் ஜனத் தொகையுடைய, நமது ஜனசமூகம் முழுவதற்கும், நமது மகாஜனசங்கம் பிரதிநிதிதானு வென்று நிதானிப்பது, நம் மகாஜன சங்கத்தின் அங்கத்தினர்களின்ஜாப்தாவிலிருந்தே. பத்துலட்சம் ஜனத்தொகையுடைய ஒரு சமூகத்திற்கு, பிரதிநிதியாகயிருக்கும் சங்கத்திற்குக்குறைந்தது ஒரு லட்சம் அங்கத்தினர்களாவது இல்லாமலிருப்பதுவிசனிக்கத்தக்கதே.

நமக்குள்ளிருக்கும் ஒற்றுமையும், நன்னோக்கத்தையும், சங்கந்தான் நமது ஜனசமுகத்திற்கு பிரதிநிதி என்பதையும், அதன் பெயரால் பேசக்கூடிய சகல ஆற்றலுமுடையதென்பதையும், இராஜாங்கத்தாருக்கும் இதர ஜனசமூகங்களுக்கும் தெற்றெனத் தெரியப்படுத்துவது அங்கத்தினர்களின்தொகையோ பத்துலட்சம் ஜனத்தொகையுடைய ஒரு சமூகத்திற்கு பிரதிநிதியாயிருக்குஞ்சங்கத்திற்கு, சுமார் இரண்டாயிரம்அங்கத்தினர்கள்மட்டு மிருந்தால், அதன் சார்பாகத் தீர்மானிக்கப்படும் தீர்மானங்கள் 10 லட்சம் ஜனங்களுக்கும் உவந்ததென எப்படிசொல்லிக்கொள்ளுவது? அப்படியே நாம் சொல்லிக்கொண்டிருந்தாலும் அது கண்ணியப்படுமா? ஆதலின்நமதுசங்கம் நம்ஜனசமூகம்பூராவுக்கும்பிரதிநிதியாயிருப்பது வாஸ்தவமானல், நமது சங்கத்தில் தீர்மானிக்கப்படும் தீர்மானங்கள் நமது குலத்தவர்கள் யாவரையும் கட்டுப்படுத்தும் என்பது உண்மையானல்நமது,ஜனசமூகத்திற்கே மகாஜனசங்கம் ஒருவழிகாட்டிஎன்றுஎண்ணுவது மெய்யானல்நமதுமகாஜனசங்கம்எதிர்காலத்தில் நமக்கும் நமது சந்ததியார்களுக்கும் அரிய பலநன்மைகளைக் கொடுக்குமென்று உணருவது சத்தியமானல், நம்மவர்கள் ஒவ்வொருவரும் நமது சங்கத்திற்கு அங்கத்தினர்களாய்ச் சேரவேண்டியது அவசியம் என்று இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

சங்கத்திற்கு அங்கத்தினராவதற்கு ஒருவருடத்திற்கு ஒரு ரூபாய் தான். நம்குலத்தவர்களில் வருடத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்க சக்தியற்றவர்கள் பெரும்பாலுமிருக்க மாட்டார்களென்றேநம்புகின்றோம் ஆண், பெண் இருபாலரும் நமது மகாஜனசங்கத்திற்கு எளிதில் சந்தாதார்களாய்ச் சேரவேண்டு மென்ற நோக்கத்துடனே சாதாரண மெம்பர்களுக்கு ரூபா 6. கட்டணமாயிருந்ததை ஒருரூபா யாக்கப்பட்டிருக்கிறது. நமது சங்கத்தின் அங்கத்தினர்களின் ஆதரவினலேதான் சங்கம் நிர்வாகம் செவ்வனே நடைபெறவேண்டிய திருக்கிறதென்பதை யாவருக்கும் ஞாபகமூட்டுகிறோம்.

நம் குலத்தவர்கள் வசிக்கும் இடங்களில் இன்னும் கிளைச்சங்கங்களும், வாசகசாலைகளும் ஏராளமாக ஏற்படுத்தவேண்டும். கிளைச்சங்கங்களின்உதவியால்தான் நமது குல பிரசாரம் ஆங்காங்கு நடைபெறவேண்டியிருக்கிறது. சிவகாசியில் கூடிய 8-வது கான்பரன்ஸ் நடைபெறுவதற்கு முக்கியஏதுவாயிருந்ததும், பேருபகாரம் புரிந்ததுமான, அவ்வூர் கிளைச்சங்கத்தின் அபிமானத்தை நாடார் மகாஜனசங்கத்தார் மிகவும் மெச்சியிருப்பதை நாம் கண்டு குறிப்பிடாமலிருக்கமுடியவில்லை.

கடந்த இரண்டு வருஷங்களாக நமது பிரசாரகர்கள் செய்திருக்கும் காரியங்களோ எழுதுவதற்கரிது. நமது பிரசாரகர்கள் குக்கிராமங்களுக்குச் சென்று நாடார் மகாஜன சங்கத்தின் நன்னோக்கத்தை எடுத்துரைப்பதும், சங்கத்திற்கு அங்கத்தினர்கள் சேர்ப்பதும், தலைக்கட்டுவரி வசூல்செய்வதும், நன்கொடைவாங்குவதுமான, பலவேலைகளை துரிதமாய்நடைபெறுவதோடு ஆங்காங்குநம்மவர்களுக்குள்ளிருந்த ஒற்றுமைக்குறைவையும் அடியோடு ஒழித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். தலைக்கட்டுவரியைகிராமங்களில் அவர்கள் வெகுதுரிதமாயும், எளிதிலும் வசூல்செய்துகொண்டு வந்திருக்கிறார்களாயினும், பெரிய ஊர்களிலும் சிறிதுதடைப்பட்டிருக்கிறது; காரணம் இவ்வூர்களில் நம்மவர்களின் கவனக்குறைவே. பெரிய ஊர்களிலுள்ளவர்கள் தலைக்கட்டுவரியைக் கொடாமலிருப்பதிலிருந்து குக்கிராமங்களிலும் தலைக்கட்டுவரி புரிவது மகா கஷ்டமாயிருக்கிறதென்பதை நாம் வற்புருத்திக் கூறுகிறோம். ரிப்போர்டின் பிந்திய விஷயங்களைப்பற்றி மறுமுறையும் எழுதுவாம்.

# திருமணம்.

முழுமுதற் கடவுளின் கிருபாகடாக்ஷத்தாலும் பெரியோர்களின் ஆசிர் வாதத்தாலும் அன்பர்களின் அனுக்கிரகத்தாலும் எனது ஜேஷ்ட குமாரத்தி சௌபாக்கியவதி தங்கமணி அம்மாளின் திருமாங்கல்யதாரணம் நாளது ஆவணிமீ 23௳ சம்பூரணமாய் நடைபெற்றது. அவ்வமயம் திருமண வைபவத்திற்கு மணிகட்டி சுவாமியவர்களும்,சரபகவி உமெலேப்பேட்டை முத்துசாமிக் கவிராயரவர்களும், விருதுபட்டி நமது நண்பர்கள் பலரும் உள்ளூரிலிருந்து உத்தியோகஸ்தர்களும் ஸ்கூல்கள் உபாத்தியாயர்களும், பிரபல இதர மனிதர்களும் வியாபாரிகளும், பந்துஜன வர்க்கங்களும் விஜயஞ் செய்து ஆசிர்வதித்து சிறப்பித்ததற்கு நமது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேம்.

சகோதரப் பத்திராதிபர்களிடமிருந்தும், பல நண்பர்களிடமிருந்தும்; பல ஆசிர்வாதக் கடிதங்களும், தந்திகளும் கிடைத்திருக்கிறது.அன்னவர்களின் வாழ்த்துதல்களை ஏற்றுக்கொண்டுதனித்தனியே அவர்களுக்கு எமது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறோம். சுபம்! சுபம்!!

ப—ர்.

## மித்திராபிமானிகளுக்கோர் குறிப்பு.

மித்திரன் 3-வதுஆண்டில் ஜனவரிமீ திற்குபின்சந்தாதார்களாய் சேர்ந்தவர்களுக்கு மூன்றுவது ஆண்டு முடியும்வரை பத்திரிகை அனுப்பிவிட்டு. பாக்கி அனுப்பவேண்டிய இருமுறை பத்திரிகையை செப்டம்பர்மீ முதல் வெளியாகும் மும்முறை பதிப்பில் அனுப்பப்படும்.

அதன்பின் நான்காவது வருடச்சந்தாவிற்கு வி. பி. அனுப்பப்படும். நமது பழைய சந்தாநேயர்களுக்கு அக்டோபர்மீ 15௳ முதற்கொண்டு வி. பி. அனுப்பப்படும்.

நமக்கு கடிதமெழுதுஞ் சந்தாநேயர்கள் சந்தா நம்பரைக் குறிப்பிட்டு கடிதமெழுதும்படி. வேண்டுகிறோம்.

## பரமன்குறிச்சி.

ஷை ஊரில் நாடார்களால் நடத்தப்பட்டுவரும் உயர்தர எலிமெண்டரி பாடசாலை நாளடைவில் விர்த்தியாகிக் கொண்டுவருகிறது. ஊரார் தங்கள் பெரு முயற்சியினல் இதுவரை 2800 ரூபாய்ஷை பாடசாலைக் கென்று செலவு செய்திருப்பது அவர்களின் ஊக்கத்தையும், கல்வியறிவின் பேரிலுள்ள பேரவாவையும் காட்டுகிறது.

கட்டட பண்டுக்காக இதுவரை வரவு ரூ 297 மலாக்கா நாட்டில் வசிக்கும் நம் பிரபல நாடார்களில் ஒருவரான மகா-ள-ள-ஸ்ரீ த. சு. மு. பெருமாள் நாடாரவர்கள் ஷை பண்டுக்காக ரூ 500 வசூலித்திருப்பதாக எமக்கு அறிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு மித்திரன் மூலமாய் பரமன் குறிச்சி நாடார்கள் தங்கள் நன்றியறிதலை தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

தென் திருநெல்வேலியில் பிரபல நாடார்களான காயாமொழி ஆதித்த நாடாரவர்கள் தங்கள் பிள்ளைகளை அனுப்பி எங்கள் பாடசாலையை ஆதரிப்பதற்காக அவர்களுக்கும் மிக்க நன்றி சொல்லுகிறோம். எல்லாவல்ல இறைவன் இன்னமும் எங்களை நடத்துவாராக.என்று தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் ஜே. ஜி. குமரப்ப நாடார் எழுதுகிறார்.

## காலப்போக்கு

[முருகதாஸன் எழுதுகிறார்]

திருநெல்வேலியில் ஆதிதிராவிடர்கள் மகாநாட்டின் தலைமைவகித்த ஸ்ரீமான் எம். ஸி. ராஜா தமதுபிரசங்கத்தில் ஆதி திராவிடர்களுக்குள்ள குறைகள் நிவர்த்திக்கவேண்டிய யோசனைகளைச் சொல்லியும் ஜஸ்டிஸ் கட்சியிலுள்ள வெளிவேஷக்காரரின் செய்கைகளைக் கண்டித்தும், ஒரு இயக்கத்தின் மனிதரெனச் சொல்லிக்கொண்டே அவ்வியக்கத்துக்குவிரோதமாயிருக்கும் குறுகியநோக்கமுடையவர்களுக்கு நல்ல புத்திகளை கற்பித்தும், ஒற்றுமையாமையைக் கண்டித்தும் டாக்டர் நாயரின் கொள்கைகளை சிலாகித்தும், பேசியிருக்கிறார். மேலும் சென்ற கூட்டத்தில் தலைமை வகித்த ஸ்ரீமான் தணிகாசலஞ் செட்டியாரைப் பலமாகக் கண்டித்திருக்கிறார் அவர் அந்தரங்க சுத்தியோடுபேசவில்லை என்று பல திருஷ்டாந்தரங்கள் காட்டுகிறார். புளியந்தோப்பு கலவரத்தில் எழுதிய கடிதத்தைப்பற்றி ஸர் தியாகராஜ செட்டியாரையும், கண்டிக்கிறார் வாய்ப்பேச்சிலின்றுவிட்டால்ஒரு பெரிய ஜனசமுகத்தின் உதவியைப்பெறமுடியாதென்று காட்டுகிறார் பேச்சளவில் காரியம் சாதிக்கமுடியாதென்று சொல்லி ஆதி திராவிடரும் ஆலயங்களில் பூஜிக்கும்படி ஸ்ரீமான் தணிகாசலஞ்செட்டியார் போன்றவர்கள் முயர்சிப்பார்களா வென்று கேட்கிறார். காலப்போக்கை அநுசரித்து நடக்கிற தலைவர்களானல், அவருடைய கேள்விக்குப் பதில்ச் சொல்வார்கள் என்பது நிச்சயம்

∴

தேசத்திலுள்ள தற்போதய ராஜீய சீர்திருத்தக்காரர்களின் பலதரப்பட்ட அபிப்பிராய முடைய தலைவர்களுடையவும், ராஜாங்க சபை, சட்டசபை, இந்தியா மந்திரிசபையிலுள்ள பிரதிநிதிகளின் கொள்கைகளுடையவும் விளக்குவான்பொருட்டு சட்டசபையில் ஒரு பிரேரபணையின் வாதப்பிரதிவாதமாக ராஜப்பிரதிநிதி லார்டு ரீடிங்குமீசைவைத்துக்கொள்வதா? வேண்டாமா வென்ற கேள்வியைக் கொண்டு ஒரு வியாசம் விகடமாகவும் வினயமாகவும், பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது. அதில் மீசைவைத்துள்ள ராஜப்பிரதிநிதிகளெல்லாம் இந்தியாவுக்கு நன்மை செய்தார்களென்றும்மீசையில்லாத ராஜப்பிரதிநிதிகள் தீர்மானம் செய்தார்களென்றும் குறிப்பிட்டு இப்போது லார்டரீடிங் மீசையில்லாதவராயிருப்பதால் மீசைவைத்துக் கொள்ளவேணுமென்று கண்டிருக்கிறது.

∴

கமிட்டிகள்:—தற்சமயம் ராஜீயவாதிகள் 25-ஆயிரம்பேர்கள் சிறையிலடைப்பட்டிருக்கிறார்கள். இன்னமும் சட்டமறுப்பைப் பலக்கச்செய்து ராஜீயக்கிளர்ச்சியை வளர்த்து இன்னும் அதிகமானபேரை ஜெயில்களுக்கு அனுப்பி அதன்மூலம் கவர்ன்மெண்டை பணியச்செய்து சுயராஜ்ஜியம்வாங்கிவிடலாமா அல்லது கிளர்ச்சியைத் தளர்த்திவிட்டு தேசத்தில் நிர்மாண வேலைகளை திறமாய்ச்செய்து அதன்மூலம் சுயராஜ்ஜியம் பெறுவது சாத்தியமா இவ்விரண்டுக்கும் மத்தியில் வேறுமுறை சாத்தியமாகுமா வென்று காங்கிரஸ்காரர்கள் ஒரு கமிட்டி நியமித்து பலவிடங்களிலும் விசாரணைசெய்துகொண்டு சுற்றுப்பிரயாணஞ்செய்தார்கள் இவர்கள் தென் ஜில்லாக்களில் நிர்மாண வேலைகளைச் சரியாய்ச்செய்யும்படி நல்லபுத்தி போதிப்பார்களானல் காரி

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## உள்ளூர் செய்திகள்.

### காலநிலை.

இரண்டுவாரங்களுக்கு முன் ஒரு பெரிய மழைபெய்ததின் நிமித்தம், விவசாயிகள் விதைத்துவிட்டார்களாயினும், பயிரின் செழிப்பிற்கும், வளர்ப்பிற்கும் வருணபகவானை எதிர்பார்த்தவண்ணமாயிருக்கிறார்கள். வெய்யோன் உக்கிரமும் அதிகமாய்த்தானிருக்கிறது.

* * *

### தற்கொலை.

சென்றமாதத்தில்நாடார்கள்மயானத்திலுள்ளமடத்தில் ஒருவர், சயிறுபோட்டுதற்கொலைசெய்துகொண்டார் வயது சுமார் 35 இருக்கலாம் இவர் தற்கொலை செய்துகொள்ளுவதற்குக் காரணம் இவர் பலநாட்களாய் சம்பாதித்துக்கொண்ட பல நோய்களின் உக்ரமே.

* * *

### மாணவர்களின் கூட்டம்

30 8 22 ல் சைவபானு க்ஷத்திரியஹைஸ்கூலில் அருப்புக்கோட்டை சப்மாஜிஸ்டிரேட்டு ஸ்ரீமான் மாசிலாமணிபிள்ளை அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்றது அவ்வமயம் பலகனவான்கள் விஜயஞ்செய்து விஷபதானம் புரிந்தார்கள். அக்கிராசனர் இறுதியில் மாணவர்களுக்கு ஆங்கிலேயத்தில் பின்வரும் முக்கிய விஷயங்களைக் குறிப்பிட்டுப் பேசினார்கள். மாணவர்கள் ஒவ்வொருவரிடத்திலும் நடந்துகொள்ள வேண்டிய மாதிரியை இதிகாச புராணங்களிலிருந்து எடுத்துக் காட்டினார்கள். மாணவர்கள் எதார்த்தத்திற்கு விரோதமான காரியங்களுக்கு எதிர்நின்று போராடுவதில் பின்வாங்கக்கூடாதென்றும், அனுவசியமாய் பயங்கொள்ளக்கூடாது என்றும் வற்புறுத்தினார்கள். அதன்பின் வந்தனோபசாரத்துடன் சபை இனிதுகலைந்தது.

* * *

### போஸ்டாபீஸ்.

இவ்வூர் போஸ்டாபீஸ் சீனியர் சப்போஸ்டாபீஸாயிருக்கிறது, ஜனங்களின் நன்மையைக்கருதிபோஸ்டாபீஸ் வைத்திருப்பதாகத் தெரியவில்லை. சுமார் இரண்டுசதுரமைல்சுற்றளவுள்ள இவ்வூரின்கீழ்க்கடைசியின் ஒருகோடியில் போஸ்டாபீஸ் இருக்கிறது. இந்த வைணத்தில், இரண்டுதரம்காலையிலும் மாலையிலும் இரண்டுவேலையாகத் தபால் எடுத்துக்கொண்டிருந்தவர்கள் ஒருதரம் தான் தபால்எடுப்பதென்று அவர்களாய் தீர்மானித்துக்கொண்டார்கள்.

---

யம் முடிந்தகதைதான். அல்லது பழையகுருடிதான்.

* * *

இந்த சேரம் இந்தியாவில் ஆயுதம் வைத்திருக்க அனுமதி கொடுத்தவர்களுக்கு மறுபடியும் வைத்திருக்கக் கொடுக்கலாமா? அல்லது அதைப் பிடுங்கிவிடலாமாவென்று விசாரித்தறியும்பொருட்டு கவர்ன்மெண்டார் ஆயுதச்சட்டத்திருத்தக் கமிட்டியொன்று நியமித்து பலயிடங்களிலும் விசாரணைசெய்துவருகிறது. இதில் பற்பல யிடங்களிலுள்ள உத்தியோகஸ்தர்கள் பற்பல்விதமாக சாட்சியங்கூறிவருகிறார்கள். ஆயுதச்சட்டத்திருத்த கமிட்டியின் முடிவையும், சட்ட மறுப்புக் காங்கிரஸ் கமிட்டியின் முடிவையும் பார்க்கவேணுமென்று ஆவலாகயிருக்கும்.

* * *

நடுப்பகலில் கட்டப்படும் தபாலுக்கு இரண்டுமணிக்கு முன்னதாகவே சூரியபகவானையும் பொருட்படுத்தாமல் அவசரமாய் ஓடிவந்து காத்துக்கொண்டிருந்தாலும், மெயில்கட்டு கட்டுவதற்கு ஒருமணி நேரத்திற்கு முன்தான் ஆபீஸ் திறக்கப்படுகிறது. இந்நிலைமையில் ஜனங்கள் வந்து போஸ்டாபீஸ் நிறைந்துவிடுகிறார்கள். இரண்டொரு ரிஜிஸ்ட்ரேஷன்களை மட்டும் கட்டுக்குச் சேர்த்துக்கொண்டு மற்றவைகளை கட்டுக்குப் பின்வாங்குவோமென்று அதிகாரதோரணையில் கிளார்க்குகள் ஜனங்களை வெருட்டுகிறார்கள். ஜனங்களின் நன்மையைக் கருதி போஸ்டாபீஸ் ஏற்படுத்தப்படுகிறதா? அல்லது கிளார்க்குகளின் சௌகரியத்தை உத்தேசித்து நடத்தப்படுகிறதா வென்பதுதான் தெரியவில்லை. ரிஜிஸ்டரேஷன் கிளார்க்காக பிள்ளைவாள் ஒருவரிருக்கிறார். இவர் மேனாட்டுநடையுடை பாவனைகளையுடையவர்களை சார்? சார்!! சார்!!! என்றுதான் பேசுகிறார். ஆனால் ஆண்டிலும், அறிவிலும், ஆராய்ச்சியிலும் முதிர்ந்து ஆங்கிலக்கல்வியில்லாத நாட்டுப்புரத்தாசாமிகளுக்கு சரியானசவாப்பு சொல்லுவதுமில்லை. அவர்களை போடா, வாடா வென்று அறியாமல் அவர்களை அதிகாரஞ் செய்கிறார். என்னே அவரின்கூற்று. பொதுஜனங்களுடைய ஆதரவில் ஊழியஞ்செய்துதனதுஜீவனத்தை கழிக்கிறோமென்பதைமறந்து அதிகாரஞ்செய்ய புறப்பட்ட புதுமையை நினைக்க நினைக்க ஆச்சரியமாய்த்தானிருக்கிறது டயம்படிதான் வேலைசெய்யமுடியும் என்று ஜனங்களின்மேல் சீறிவிழுகிறார் அவருடைய குணங்களை விஸ்தரித்துக்கொண்டிருப்பதால் யாதும் பயனில்லை புதிதாய் வந்திருக்கும் போஸ்டுமாஸ்டர் நல்ல குணசாலியாயிருப்பதோடு ஜனங்களிடத்தில் பக்ஷமாய் நடந்துகொள்ளுகிறார். ஆனால், கிளார்க்குசெய்யும்செய்கைகள் போஸ்டுமாஸ்டருக்குத் தெரியாமலே நடந்துவருகிறது ஆகையால் கனம் போஸ்டுமாஸ்டர் இவைகளைக் கவனிக்குமாறு வேண்டுகிறோம் என்றுஒரு நிருபர் எழுதுகிறார்.

* * *

### யூனியன்போர்டு.

புதிதாகதேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் சேர்மன் கனம் சுப்பிரமணியபிள்ளை அவர்கள் அடிக்கடி டவுனைச்சுற்றிப்பார்த்து சுகாதாரவசதிகளையும், தெருக்களில் விளக்குபோடுதல் முதலியவைகளையும் நேரில் பார்வையிட்டு தக்க ஏற்பாடு செய்கிறார் என்பதை மகாஜனங்கள் அறிந்து சந்தோஷப்படுகிறார்களாயினும், தொழில்வரி போடப்போகிறார்கள் என்று கேள்விப்பட்டவுடனே யூனியன் நிர்வாகிகள்மேல் ஜனங்களுக்குதிருப்தியில்லை. நிர்வாகத்திற்கு போதிய வருமானமிருந்தும் அதிக வரி போடுவதற்கு காரணமென்ன வென்று ஜனங்கள் முணுமுணுக்கிறார்கள். தொழில் வரிபோட்டாலும், கொடுப்பதற்கு தயாரில்லாததுபோல் பேசுகிறார்கள். அதை கனம் சேர்மன் அவர்கள் கவனிப்பார்களாக. என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

* * *

ஸ்ரீமத் ஏனாதிநாத நாயனார் 22-வது ஆண்டு குருபூஜை மஹோற்ஸவம் நாளது வருடம் புரட்டாசிமாதம் 14-ந்தேதி சனிக்கிழமை பகல் 10 மணிக்கு ஆங்காங்குள்ள தர்மசீலர்கள் உதவியால் குருபூஜை நடைபெறும் அவ்வமயம் பக்தகோடிகளுக்கும், மற்றும் ஜனங்களுக்கும் அருசுவையுடன் அன்னமளிக்கப்படும்.

## இந்தியச் செய்திகள்.

### பசுக்களின் விடுதலை.

நமது தேசத்தில்காங்கரஸ்காரர்களும் கிலாபத்துக் காரர்களும், தீவிர பிரசாரங்கள் செய்ய முற்பட்டதிலிருந்தே நமது தேசத்திலுள்ள பசுக்களுக்கு சிறிது விடுதலை ஏற்பட்டுவிட்டது. இரண்டு கக்ஷிக்காரர்களும் தேச நன்மையைக்கருதி உழைக்க ஆரம்பித்தவுடனே, மத விஷயமான சில பிரச்னைகள் குறுக்கிட்டன, இருவரும் ஒருவர்க்கொருவர் மத விஷயமான வைகளை விட்டுக் கொடுத்திருக்கின்றனர். இந்துக்கள் தெய்வ அம்சமாகக் கருதும் பசுமாடுகளை முஸ்லீம்கள் தங்களுக்கு உணவாகக்கொண்டிருந்ததைகூட, கட்டுப்பாடுடன் பசுக்களை இனி கொலைசெய்வதில்லை என்று உறுதிக் கொண்டார்கள். சமீபத்தில் ஆப்கானிஸ்தானதில்க்கூட, அமீர் தனது தேசத்தில் எவரும் பசுக்கொலை செய்யக் கூடாதென்று கண்டிப்பாய் உத்திரவுசெய்திருக்கிறாராம். ஒரு தேசத்திலுள்ள பலதரப்பட்ட, அபிப்பிராய முடை மானிடவர்க்கம் ஒன்று சேர்ந்து ஒற்றுமைப்படும் பொழுது, தேசத்திலுள்ள சகல ஜீவராசிகளும் விடுதலை பெற்று சுக ஜீவிகளாக வாழும் என்பதற்கு இதுஒரு அத்தாட்சிதான்.

* * *

### ஏகாதிபத்திய பொருட்காட்சிசாலை.

1924 ஞு லண்டனில் நடக்கப்போகிற ஏகாதிபத்தியப் பொருட்காட்சிசாலைக்கு ஒவ்வொருபாகங்களிலிருந்தும் சாமான்களை கேட்பதுபோல் இந்தியாவையும் கேட்கிறார்கள். இதற்கு ஏராளமான பணச்செலவு செய்யப்படும்

இந்தியாவின் பணவுதவி சிறிதுகூட இல்லாமல்கூடி சாலை நடை பெறுதென்பது நாம் அறிந்தவிஷயமே. கூ சாலைக்கு தனது பொருளுதவின் பெருமைகாட்டசென்னைமாகாணம் முன்னமே பெருத்த ஆடம்பரம் பண்ணிக்கொண்டிருக்கிறது. ஏழைகள் மிகுந்த நம் சென்னை மாகாணம், கல்வியும் பொருளாதரவின் நிலைமையும் கவனிக்க எப்போது முற்படுமோ!

## அயல்நாட்டு செய்திகள்.

### குருடி B. A.

ஸ்காத்லாந்தில் மிஸ்மேரிகிரேஸ் ஆண்டர்சன் என்ற ஒரு குருட்டு ஸ்திரீ சமீபத்தில் B. A. பரிட்சையில் தேரியிருக்கிறாளாம். இந்த ஸ்திரீயைப்பற்றி ஒவ்வொரு பத்திரிகையும் விடாமல் எழுதிக்கொண்டுதானிருக்கிறது. ஆனால் ஒருகுருடனும் M A பரிட்சையில் தேரியிருப்பதாக இரங்கூனிலிருந்து வெளிவரும் "தேசோபகாரி"என்ற பத்திரிகையின் நிருபர் தாம்நேரில் பார்த்திருக்கிறதாகவும் கூறுகிறார்.

* * *

### கடனின்தொல்லை.

அமெரிக்கா தனக்கு செல்லவேண்டிய 8500000000 பவுனைத் தரவேண்டுமென்று பிரிட்டனை அவசரப்படுத்துகிறது. ஆனால் நேசதேசத்தார் பிரிட்டனுக்குச் சேரவேண்டிய 34000000000 பவுனுக்கு யாதொரு பதிலும் சொல்லாமலிருக்கிறார்கள். பிரிட்டனுக்கு கடன் கொடுத்த அமெரிக்கா கூச்சலிடுகிறது. பிரிட்டனுக்குத் தரவேண்டிய நேசதேசங்கள் தயங்குகின்றன. கடனின் அவஸ்தையை பிரிட்டன் இப்போதுதான் உணர்ந்திருககிறது.

* * *

மகாயுத்தத்திற்குப் பிறகு ஐரோப்பாவில் சுமார் 25 லட்சம் ஸ்திரீகள் புருஷர்களைவிட அதிகமாயிருக்கிறார்களாம்.

* * *

## இலங்கை வர்த்தமானம்.

இலங்கை இந்திய சங்கத்தின் ஆதரவின்கீழ். பப்ளிக் ஹாலில் 26-8-22 பிற்பகலில் 4-30 மணிக்கு இந்திய அரசாங்கத்தின் முன் இப்பொழுது தர்க்கிக்கப்படுகிற "இந்தியன் எமிகிரேஷன் மசோதா" இலங்கைக்கு விரோதமாய்ப் பிரயோகிக்கப் படுமாகையால் அதைக் கண்டிக்கும்படி ஓர் கண்டனக் கூட்டம் கூட்டப்பட்டது. அவ்வமயம் ஹானரபின் மிஸ்டர் ஈ.ஆர். தம்பிமுத்து அவர்கள் அக்கிராசனம் வகித்தார் என்று 'இந்தியன' என்ற பத்திரிகை கூறுகிறது.

* * *

### இலங்கை பால்யநாடார் சங்கம்.

இலங்கை பால்ய நாடார் சங்கத்தின் ஆதரவில் கொழும்பு, நாரீஸ்ரோட், 27 நிர், விருதுபட்டி நாடார்கிளப்பின் மேல் மாடியில் நமது தாய்ச்சங்கமாகிய மதுரை நாடார் மஹாஜன சங்கத்தின் சாஸ்வத பிரசிடெண்ட் ஸ்ரீமான் த.வெ. பாலகுருசாமி நாடாரவர்களின் பெயரால் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிற இந்த வாசகசாலையில் ஷை பால்ய நாடார் சங்கத்தின் இரண்டாவது மாதாந்தர பொதுக்கூட்டம் நாளது செப்டெம்பர் மீ 17உ (17-9-22) ஞாயிற்றுக்கிழமை இரவு 9-மணி முதல் நடைபெறும். அறிஞர் பலர் நமது ஜன சமூக முன்னேற்ற விஷயமாய் உபந்நியாசஞ் செய்வார்கள். அபிமானிகள் யாவரும் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது விஜயஞ் செய்து சிறப்பித்து நமது வாசகசாலையையும். நாடார் கிளப்பையும் பூரணமாய் ஆதரிக்குமாறு அன்புடன் கோருகின்றோம். சுபம்.

ஞா. பா. வேதநாயக நாடார்
சு. பெ. எட்வர்ட் நாடார்
கௌரவ காரியதரிசிகள்.

குறிப்பு—நமது நாடார்கிளப்பிலேயே சாப்பாடு சாகை வைத்துக் கொள்ளுங்கள். சங்கத்திற்கு அங்கத்தினராய்ச் சேருங்கள், சந்தாப்பாக்கியைக் கொடுத்துதவுங்கள். உங்கள் சினேகிதரான எங்குலத்தவரை வாசகசாலைக்கு புஸ்தகங்களை அனுப்பச் சொல்லுங்கள் இதுவே குலாபிமானம்.

## கிரேக்க துருக்கி யுத்தம்.

### துருக்கியர்கள் வெற்றி.

ஆசியதுருக்கியை விட்டு கிரேக்கர்கள் காலி செய்து விட்டு ஓடும்படியான ரீதியில் துருக்கியர்கள் பலமாக சண்டை செய்து முன்னேறுகின்றார்கள். கிரேக்கர்கள் சமாதானம் நிலவ சம்மதித்துள்ளார்கள் இதனால் நிகழ்ந்துள்ள அபாயகரமான நிலைமையின் காரணமாய் நேசதேசங்கள் பெரிதும் பீதியடைந்து இம்மாதக் கடைசியில் கூடுவதற்கான ஏற்பாடுகளை இத்தாலிய அந்நியநாட்டு மந்திரியான மிஸ்டர்ஷான்ஸர் செய்துவரும் வெனிஸ் மகாநாட்டை சீக்கிரத்தில் கூட்டிவைக்க அரசாங்கத்தார் ஆவலுள்ளவர்களாயிருப்பதாகத் தெரிகிறது.

அணடோலியாவில் துருக்கியர்களுக்கு வெற்றி கிடைத்ததின்பலனாக பல யுத்த தளவாடங்களையும் சிலஇடங்களையும் துருக்கியர் கைப்பற்றியிருக்கின்றனர்.

---

உலக சிரேஷ்டர் மகாத்மா காந்தியின் மாசில்லா உபதேசங்களுக்கேற்ப புத்தி தீட்சண்யமுள்ள ஹிந்து முஸ்லிம்கள் பலவிடங்களிலும் ஐக்கியபாவம் நிறைந்திருக்கின்றனர் இதனால் தங்களுக்குள்ளிருக்கும் மனப்பான்மையைவிட்டுக் கொடுத்திருப்பதுமல்லாமல் மதாபிமானம் படைத்த மக்களுய்யு மிவ்விந்தியாவில் பலகாலும் இடையிடையே ஹிந்துக்களுக்கும் மகமதியர்களுக்கும் நிகழ்ந்துள்ள மதவிஷயமான சச்சரவுகளும் ஒருவாறு ஒழிந்து போகும்படியான ரீதியிலும் நடந்து கொண்டிருக்கிறார்கள் ஆனால் காலத்தின் இயல்பையும், போக்கையும்அறியாத நிரக்ஷரக்குட்சிகள் கடந்த முகரம்பண்டிகையின்போது மூல்டானிலும் கல்கத்தாவுக் கடுத்த தனிபாரா வென்ற இருவிடங்களிலுமுள்ள ஹிந்துமுஸ்லிம்கள் மிலேச்சத்தனமாய் நடந்துகொண்டதின் பலனாக உயிர்ச்சேதமுண்டாகியிருப்பதாகத் தெரிகிறது. இதில் குற்றம் யார் மேல் இருக்கிறதென்று சொல்வதற்கில்லை.

---

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நமது நன்னூல்.

தமிழ்த்தாயாரின் செல்வப்புத் திராயதிந்த புலவர்களின் புலமைக்கின்றியமையாப் பூஷணமாக பவணந்தி முனிவர் நன்னூல் என்னுமோர் புஸ்தகம் எழுதிமுடித்திருக்கின்றார். இந்நூல் பெரிதும் இலக்கண இலக்கியத்தையே எடுத்துக்கூறும். இது தமிழ் மக்கள் சகலருக்கும் பொதுவானது. பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகால வகையினலே. என்ற நன்னூலாரின் வாக்கியப்படி கால சக்கர மாறுபாட்டிற் கிணங்கத்தற்காலம் நமதிந்திய சகோதரர் பலரும், தத்தம் குலகலாபி விருத்தியைக் கோரி அவரவர் குலக்கோட்பாட்டைக்கூறும் ஜாதீயக் காவியங்களை எழுதிமுடித்து வைத்திருக்கின்றனர். அத்தகைய நூற்கள் ஒவ்வொன்றும் அவ்வக்குலத்தினருக்கு நன்னூலேயாம். இம்முறைக் கிணங்க நமது பாண்டியகுல க்ஷத்திரிய நாடார்களின் பூர்வீக அரசாங்கக் காரியாதிகளையும் கோத்திரம் தொழில் குலம் முதலியவற்றை விரிவாகவும் இலக்கண விலக்கியப்படியும் பன்னூற்களின் மேற்கோளைக் காட்டியும் இதுவரை அநேகநூற்கள் வெளிவந்திருக்கின்றன. இருக்கினும் சகோதரர்களாகிய தாய்நாட்டினரில் சில பொருமியர்கள் அதற்கு மாறுதல்கூறி இதுபொய் அது மெய், நீ அந்த ஜாதி நானிந்த ஜாதி என்ற குதர்க்கத்தையே பெரிதும் நம்முடன் பிரயோகித்து வருகின்றனர். இதற்குக் காரணமென்ன வென்றால் சிக்கில் நன்னூல் வாசிப்பின்மையும் நாடார் என்ற பட்டப்பெயரின் பொருள் தெரியாமையுமேயாம். இக்குதர்க்கம் நீங்கவும் நமது குலாதிக்கம் பெறவும், நாடார் என்னும் பட்டப் பெயரின் பொருளைப் பொருமியர் பலரும் கல்விக்கண்ணைக் கொண்டறியவும் நமது சகோதரர் க்ஷத்திரியமித்திராசிரியர் சோழதேசாதிபத்தியச் சூரியகுலாதிபர், இலக்கண விலக்கியக் கலாவல்லவர் சென்னை ஸ்ரீமான் த. விஜயதுரைசாமி கிராமணியார் அவர்களால் எழுதிய நாடாரேன்னுஞ் சொல்லாராய்ச்சி என்ற புஸ்தகத்தை நமது நன்னூல் என்று பன்முறையும் சொல்லத் தடைபாரிலை.

சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை யுடைமை யாழமுடைத் தாதல்
முறையின் வைப்பே யுலகமலை யாமை
விழுமியது பயத்தல் விளங்குதா ரணத்த
தாகுத நூலிற் கழகெனும் பத்தே.

என்ற பவணந்தி முனிவரின் வாக்கியப்படி பத்தழகையும் ஒற்றுமையாகக் கொண்ட நமது சொல்லாராய்ச்சியைநன் னூலென்றோதப் பின் வாங்குவாருண்டோ?

நமது நன்னூலை அச்சிட்டுஅரங்கேற்றஞ் செய்வதற்காக நூலாசிரியரவர்கள் செல்லாத தனவந்தரில்லையில்லை. என்னே! நமது குலச் செல்வரின் தனத்தழகு. உலகமுள்ளவரை உயிருக்குயிராகி நிற்கும் நமது நன்னூலை அரங்கேற்ற ஒவ்வொருவரிடமும் வசூலித்துப் பணந்தேடவும் வேண்டுமோ? மனம் வைத்தால் க்ஷணப்பொழுதில் பணச்செலவிட்டு அரங்கேற்றுவிக்கும் திறம்பெற்ற செல்வம்நிறைந்த நம்குலத்தார்மிகரில்லையா? இதற்கொரு கமிட்டியும் அதற்கொரு காரியதரிசியுந் தேவையா? ஐயோ கரும்புதின்னக் கைக்கூலியா? கமிட்டியேற்பட்டுங் காலகாரணமாகவே வேலை நடக்கின்றது. தற்போது சில குலாபிமானிகள் முயற்சியுடன் பொருள் வசூல்செய்வதுபோல் நம் குலப் பிரபுக்களும் பெரியோர்களும் இக்காரியத்தில் சிறிதுமனம்வைத்துக் கமிட்டியாருக்கும், காரியதரிசிக்கும் உற்சாகங் காட்டித் தத்தமக்கியன்ற தனசகாயஞ் செய்வதுடன் ஏனையோரிடமுங் கூடுமான தொகையை வசூல்செய்து நமது சொல்லாராய்ச்சி என்னும் நன்னூலை இன்னுளில் அரங்கேற்றுவிப்பாராகில் நமது குலத்திற்குப் பன்னாளும் பெரிய புகழேற்படும். அபிமானத்துடன் முயற்சி செய்வார்களாகில் இன்றைக் கைந்தாவது நாளில் அரங்கேற்றுவிக்கலாம். நாடார்குலமித்திரா! நாளை நாளை என்று நாளைக்கடத்தாமல் நவீனகமும், நாகரீகமும் நம்குல வெழுச்சியின் ஜெயக்கோஷ்டமும் நாணுதிக்கும் பாவுமிக்காலத்தில் அரங்கேற்றமாகவேண்டும் நமது நன்னூல்.

ச. சு. சங்கரலிங்கநாடார்.

## ஒரு லக்ஷம் அங்கத்தினர்தேவை.

### க்ஷத்திரியர்களே உங்கள் கடமையை உடனேசெய்யுங்கள்!

(மதுரை நாடார் ஊழியப்பிரசார சபையிலிருந்து)

அரசகுலத் தண்ணல்களே? நமது ஜனசமூகமானது நாடார் மஹாஜன சங்கம் என்றகற்பகத்தருவின் மகிமையால் நாளுக்கு நாள் முன்னேற்ற மடைந்து வருகிறது. இன்னும் விசேஷமாய் முன்னேற்றமடையச் செய்யவேண்டியதற்கு நமது தாய்ச் சங்கமானது பல லக்ஷம் அங்கத்தினர் வேண்டுமென்று எதிர்பார்க்கிறது. அதின் தேவையைப் பூர்த்திசெய்வது நாடார் சமூகத்தில் பிறந்த நம் ஒவ்வொருவருடைய கடமையன்றோ? பூமியில் வெட்டி எடுக்கும்போது ஒளியின்றி மங்கலாக இருக்கும் வயிரத்தள்மானது சாணையில் தேய்த்துப்பட்டை போட்டவுடன் பிரகாசிக்க ஆரம்பித்து உயர்ந்த விலை மதிப்பு ஏற்படுவது போல நாடார் மஹாஜன சங்கம் அங்கத்தினர் ஜாப்தாவில் நம் பெயர் பதியப்பட்டவுடனே மறைந்துகிடக்கும் குலாபிமானப்பிரகாசம் வெளித்தோன்றி நமது ஜன சமூக முன்னேற்றத்திற்கோர் ஆதரவைக்கொடுக்க ஆரம்பித்துவிடுகிறது. நமது க்ஷேமத்தைக் கருதி இதுவரை நடந்த கான்பரன்ஸ்களில் பல இன்றியமையாத் தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறோம். அவைகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவந்தால் மட்டும் நம் கோரிக்கைகள் நிறைவேறி, குறைகள் நிவர்த்தியாகி, உண்மையில் க்ஷத்திரியர் என்பதை உலகத்தாருக்கு பகிரங்கமாக நிரூபித்துக் காட்ட முடியும். இதற்காகவே நம் கான்பரன்ஸ் தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டதால் அதற்கு அனுகூலத்தையளிக்கும்பொருட்டு மஹாஜன சங்கத்துக்கு விசேஷ ஊக்கத்தைக் கொடுக்கும்பொருட்டும் ஜனத்தொகையின் சக்திக்குத் தகுந்தபடி ஏராளமான அங்கத்தினர் சேர்ந்து ஆதரிக்கவேண்டியது அவசியத்திலும் அவசியமாகிவிட்டது. அங்கத்தினர் தொகை அதிகரித்தால் நமது மஹாஜன சங்கத்தின் பலமும் க்ஷேமமும் அதிகரித்து நம்மை,முன்னேற்ற மென்னும் பந்தய ஓட்டத்தில் முதன்மைபெற ஏதுவாய்வெகு துரிதமாக இழுத்துச் செல்லும், உலகமே உயர்நிலையைநோக்கிச் சென்று கொண்டிருக்கும்போதுநாம் நம்முடைய கடமையைச் செய்யத்தவறினல் நம்ஜாதி முன்னேற்றத்திற்கும் பின் சந்ததிகளின் க்ஷேமத்திற்கும் தீங்கிழைத்தவர்களாவோம்.

குலாபிமானச் செல்வர்காள்! இப்பழிச்சொல்லுக்குப் பாத்திரராக உங்கள் மனம் சம்மதிக்குமா? க்ஷத்திரியகுல தர்மத்தின்படி ஒருக்காலும் சம்மதிக்காது. அங்கத்தினராகாமல் மஹாஜன சங்கத்தில் சகல சுதந்தரங்களையும் அனுபவிக்கவுமுடியாது. அங்கத்தினர் சந்தா ஒரேரூபாயாக ஏற்படுத்தப்பட்டிருப்பதால் வருஷத்தில் ஒரு ரூபாய் கொடுத்து அங்கத்தினராகச் சேருவது மிகவும்சிலாக்கியமான காரியமேயாகும்.ஆனதால் ஒவ்வொருவரும் தவறாமல் இன்றே நமது மஹாஜன சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்ந்து நமது ஜனசமூகம் கல்வி, கைத்தொழில் வியாபாரம், விவசாயம், ஒற்றுமை, நாகரீகம் முதலிய சகல விஷயங்களிலும் விசேஷ செல்வாக்கைப்பெற்று ஆதியிலிருந்த உன்னத நிலைமையை அடைவதற்கு ஆதரவளிக்கும்படி தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறோம்.

## சிரரோக சேதனம்.



இது காசியில் ஓப ரசித்திபெற்ற மஹானுபாவரால் ஜனங்களொவ்வொருவரும் அடிக்கடி தலைவலியால் படும் துன்பத்தை கஷ்டமின்றி க்ஷண நேரத்தில் நீக்கும் பொருட்டு உண்டுபண்ணப்பட்டது. இது தலைவலி, ஒற்றைத் தலைநோய், மண்டை குடைச்சல், மண்டை சவிஜலநோஷம், ஜன்னி, மண்டை காய்ச்சல், கண்ணில் மஞ்சள், கண்ணில் பீளை கட்டுவது கண் மப்பு, கண்ணில் சதை வளருதல் முதலியவைகளை நீக்கக்கூடியது. இதை முதலில் தலைவலிக்காரர்கள் உபயோகித்துப் பார்த்தால் அப்போது இதர்குள்ள சக்தியும் இதன் பெறமானமும் தெரியவரும். சமயத்திற்கு ரூபாய் 100 கொடுத்தாலும் தலைவலி துன்பத்தை உடனே நீக்குவதற்கு இது தவிர வேறில்லை இதன்விலை ஒரு செப்புக்கம்பி வி. பி. சார்ஜு உள்பட புட்டி 1-க்கு ரூபாய் 1-0-0

எவ்வித தலைவலியாயினும் சரி இதனால் பலனில்லை என்பவர்களுக்கு பணம் வாபீஸ் அனுப்புவோம். ஏஜண்டுகள் தேவை.தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

### ஆடோமாடிக்ஸ்பிரிங்பான்.


இவ்விசிறி அசல் நிக்கில் சில்வரினல் செய்யப்பட்டு அமெரிக்கா தேசத்தினின்றும் ஜர்மெனியினின்றும் புதிதாய் வரவழைக்கப்பட்டது. இது எலக்டிரிக் சக்



தியினுல் எப்படி சுற்றுமோ அவ்விதமே வில் இசையால் சுற்றக் கூடியது இதனுல் எவ்வளவு காற்றுதேவையானாலும் அடையக் கூடும். இவற்றைபடத்தில் காட்டியபிரகாரம் உபயோகிக்க வேண்டியது. ஒன்று மாதிரியாக வரவழைத்தும் பார்த்தால் அனைவரும் வாங்கக்கோருவார்கள். இதன் விலை நிக்கில்சில்வர் பான் ஒன்றுக்கு ரூபாய் 5-0-0 தகத்தினுல் செய்யப்பட்டபான் ஒன்றுக்கு ரூபாய் 3-8-0 பார்வைக்கும் வெகு அழகாயிருக்கும்.

### வெகுஉயர்ந்த க்ஷவரக்கத்தி.

இவை ஒவ்வொருவடரித்திலும் வேண்டியது அவசியம். இதனுல் நாமேமுக க்ஷவரம் செய்து கொள்ளவும். பலபேருக்கு செய்த இதாகத்தியினுல் செய்து கொள்வதால் சம்பவிக்கும் வியாதிகள் அதாவது படை, சிரங்கு முதலிய தொத்து வியாதிகள் ஏற்படாமலிருக்கும் பொருட்டு அம்பட்டனிடத்தில் நாம் கத்தியைக் கொடுத்து கொள்ளலாம். ஒருவர்



ஒருகத்தியை வரவழைத்துப் பார்த்தால் பின்புபலரையும் வாங்கச் செய்யும். திருப்தி இல்லாதவர்களுக்குப் பணம்வாபீஸ் செய்யப்படும்:

"கிரவுன் சுவோர்ட் ஹாலோகிரவுண்ட் ஜர்மன் ரேஜர் 1-க்கு ரூ 3-8-0.

"லயர் அண்டு சுவோர்ட் ஷ் ஜர்மன் ரேஜர் 1-க்கு ரூ 3-0-0

சிமைமேகர் ஹாலோகிரவுண்ட் ரேஜர் 1-க்கு 3-0-0

ஷ் சாதா ரேஜர் 1-க்கு ரூ 2-0-0

மேற்கூறிய கத்திகள் ஒவ்வொன்றும் இரட்டைபாலி ஷ்கத்திகள் புதிய ஸ்டாக்கு ஒரேதடவையில் 12 கத்திகள் வாங்குபவர்களுக்கு ஒரு கத்தி இனும் அனுப்பப்படும்.

விலாசம்.

**மதருஸ் நேஷனல் சப்ளைகம்பெனி,**
வண்ணாரப்பேட்டை மதருஸ்.

### எட்டுமூலை லேடீஸ் ரிஸ்ட் லெட் கெடியாரங்கள்.

இக்கெடியாரங்களை பலபேரின் வேண்டுகோளின் பொருட்டு விசேஷமாக அமெரிக்காவிலிருந்து வரவழைத்திருக்கிறோம் வெகு உயர்ந்த மீடனும்மேகர்கெடியாரங்கள் ஒருவருஷம் தான் காரண்டி கொடுப்போம். ஒவ்வொன்றும் பிராஸ்லெட் செயினுடன் அனுப்பப்படும்.



அசல் நிக்கில் 8 மூலை கெடியாரம் 1-க்கு ரூபாய் 8-8-0

ஷ் பொன் கில்ட் ரூபாய் 10-0-0

அசல் நிக்கில் ரவுண்டுகெடியாரம் 1-க்கு ரூபாய் 7-8-0

ஷ்பொன் கில்ட் ரூ 9-0-0

விலாசம்.

**விக்டர் வாச்சு கம்பெனி,**
வண்ணாரப்பேட்டை மதருஸ்.

## இனும்!

செல்வ ரஸக்கீர்த்தனை
இனும்!

## இனும்!!

5-வது கான்பரன்ஸ்
ரிபோர்ட்
இனும்!

### நாடார்குல மித்திரன் மாதம் மும்முறைப் பதிப்பு.

நமது மித்திரனுக்கு புதிய இரண்டு சந்தாதார்களைச் சேர்த்துக்கொடுத்து முன்பணமாக அனுப்பச் செய்கிறவர்களுக்கு, மாநாடு தண்டுப்பத்து ஸ்ரீமான் சொ. செல்லத்துரை என்ற ஆறுமுகப் பெருமாள் நாடாரவர்கள் இயற்றிய செல்வரசக்கீர்த்தனை இனமாக அனுப்பப்படும். இதில் பலவர்ணமெட்டுகளாலான கீர்த்தனைகளும், மற்றபாட்டுகளும் அடங்கிருக்கிறது. 3 அணுவிலைமதிப்புள்ளது. பழைய சந்தாதார்கள் தங்கள் 4-வது வருடத்துசந்தாத் தொகைரூ 3-8-0யைநவம்பர்மீ 30வ க்குள் அனுப்புவார்களானல் நாடார்குலத்தவர்களின் முக்கிய வாசஸ்தலங்களில் ஒன்றுகிய விருதுபட்டியில் கூடிய 5-வது கான்பரன்ஸ் ரிபோர்ட்டு இனமாக அனுப்பப்படும். இது உயர்ந்த டிம்மியில் பதிப்பிக்கப்பட்டது. விலை 6 அணு மதிப்புள்ளது. இதில் 5-வது கான்பரன்ஸுக்கு விஜயஞ்செய்த ஒவ்வொருவருடைய பெயர்முதலிய முழு நடபடிக்கைகளின் விபரமும், செலவு கணக்கும், மற்றவர்களுடைய அரிய உபந்நியாசங்களும் அடங்கியிருக்கிறது.

**நாடார்குல மித்திரன் ஆபீஸ், அருப்புக்கோட்டை.**

நீங்கள் ஒரு சந்தாதாரரா? இல்லையா? அப்படியாயின் சேருவதற்கு முந்துங்கள்.

### ஸ்ரீ ராம கிருஷ்ண விஜயம்.

பிரதிமாதமும் முதல் வாரத்திற்குள் தவறாமல் வெளிவரும் இப் பத்திரிகை பிறமத தூஷணையின்றி, ஹிந்துமத விருத்தியையும், தேச சேவையையும் முக்ய நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

ஹிந்து மதத்திற்குப் புத்துயிர் அளித்த தவராஜ சிங்கமாகிய ஸ்ரீமத் ஸ்வாமி விவேகாநந்தர் நிறுவிய ஸ்ரீ ராம கிருஷ்ண மடத்தாரால் நடத்தப்படுவது.

தமிழ், ஆங்கிலம் இவற்றில் வல்லுநராலும் உலகானுபவம் மிகப் பெற்றவர்களாலும் எழுதப்படும் விஷயங்களைக் கொண்டது.

மானேஜர், ஸ்ரீ ராம கிருஷ்ண விஜயம்,
மயிலாப்பூர், சென்னை.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## பெண்களுக்கு பூஷணம் பிரியமே.

பெண்களுக்கு சகல வஸ்துக்களிலும் புருஷர்களைவிட பிரியம் அதிகமாகவேயிருக்கும் இது இவர்களுக்கு இயற்கையாக ஏற்பட்ட சுபாவகுணம் பெண்கள் உலகத்துக்கும் உலக இன்பங்களுக்கும் ஏற்றவர்கள். பெண்கள் இல்லாவிட்டால் குடும்பம் என்பது கிடையாது. பெண்களால்தான் குடும்பம் விருத்தியாகி மேன்பாடு அடையவேண்டும் புருஷன் எவ்வளவு சாமார்த்திய முள்ளவனாகயிருந்தாலும் பெண்களின் சாமார்த்தியம் இல்லாவிட்டால் புருஷர் சாமார்த்தியமாயிருந்தும் பிரயோஜனத்தை அடையாது. பெண்களுக்கு நகைகள், உடைகள் இவைகளமீது அதிகப் பிரியமுண்டு. அதைவிட அதிகப் பிரியம் தன் நாயகன்பேரில் அந்தரங்கமாக உண்டு. அதைவிட அதிகப்பிரியம் தன் குழந்தைகள்பேரில் அளவற்றதுண்டு. அப்படி குழந்தைகள்பேரில் அவர்கள் இவ்வளவு பிரியம் வைக்காவிட்டால் நாம் குழந்தை பருவங்களில் நன்ருய் காப்பாற்றி ரக்ஷிக்கப்பட மாட்டோம். ஒரு குழந்தையின் தாயானவள் தன் குழந்தைக்காக இராப்பகலாய் கண்விழித்து தன்னுடைய எல்லா சௌகரியங்களையும் குறைத்துக் கொண்டு படாதபாடுகள் படுகிறாள். அக்குழந்தை தன் கெற்பத்திலிருக்கும்போதும் பிரசவ சமயங்களிலும் அவள் படுகிற பாடுகள் இதைவிட அதிகமாகவேயிருக்கும். இவ்வளவு கஷ்டங்களையும் அவள் சந்தோஷமாய் அநுபவித்துக் கொள்வதற்குக் காரணம் பிரியமே. இப்பிரியம் என்ற குணம் அவர்களுக்கு இயற்கையாகவே அளவுக்கு மிஞ்சி ஏற்பட்டிருக்கிறது. தான் பெற்ற பிள்ளை தனக்கு எவ்வளவு கெடுதல்செய்தாலும தன் ஆஸ்திகளை எல்லாம் அழித்து விட்டாலும் அப்பவும் பெற்ற தாய்க்கு பிள்ளையின்மீது பிரியம் நீங்காது. அப்பொழுதும் பிள்ளைக்கு ரகசியமாய் பொருள்களை தன் நாயகனுக்குத் தெரியாமல் கொடுத்து காப்பாற்றுகிறதுண்டு. இதன் காரணமாகவே "பிள்ளை மனம் கல்லு பெற்ற மனம் பித்து" என்றபழமொழி வழங்கிவருகிறது. பிள்ளை கொடிய துஷ்டனுயினும் பிள்ளையை கண்ணில் பார்த்துக் கொண்டிருந்தால் போதுமென்பார்கள். இது விஷயங்களில் புருஷர்கள் இவ்வளவு சகிப்போடு இருக்க முடியாது. புருஷர்களுக்குப் பிரியம் மட்டென்றே சொல்லலாம். ஆனல் புருஷர்கள் தங்கள் முழுப்பிரியங்களையும் தன் மனைவிமார்களிடத்தில் செலுத்துகிறார்கள். இது இல்லற இன்ப ரகசியமாயிருக்கிறது. எந்த மனிதனும் தன் மனைவியின்மீது பிரியமில்லாமல் விருந்திருக்கமாட்டான், அப்படி பிரியம் வைக்காவிட்டால் குழந்தைகள் உற்பத்திக்கு காரணமில்லை. இது புருஷர்களே தாங்களாக ஏற்படுத்திக்கொண்டதல்ல இயற்கையாகவே கடவுளால் உலக உற்பத்தியின் நிமித்தம் ஏற்பட்டது. ஆகையால் புருஷர்களின் பிரியமே பெண்களுக்கு விசேஷ பூஷணமாகயிருக்கிறது. புருஷர்கள் பெண்களை " My dear என்பிரியமே" "My love என் நேசமே" என்றும் சொல்வதுமுண்டு இது அந்தரங்க முழு எண்ணத்துடன் சொல்லுகிறதே யொழிய வெளியில் மாத்திரமல்ல. இது மேல் நாட்டாரிடம் அதிகமாக வழங்கிவருகிறது. அதனுல்தான் அவர்கள் மேன்மை யடைந்திருக்கிருர்கள். நமது தேசத்தில் தன் மனைவியின்மீது அந்தரங்கமாக அதிக பிரிய மிருப்பினும் வெளியில் சொல்ல வெட்கப்படுகிறான். வெளியில் பிரியமில்லாதவன்போல் வெட்கத்துக்கு பயந்து அபிநயிக்கிறான். இதனுல் குடும்பங்களில் அநேக கஷ்டங்கள் ஏறபடுகிறது. தவிர தபசிருந்து பெற்று வளர்த்த தன் மகனுக்கு தன் அந்தஸ்தைவிட உயர்ந்த அந்தஸ்துள்ள இடத்தில் பெண் எடுத்து விவாகம் செய்து வைத்து அவர்கள் ஸ்திரி புருஷர்களாக இல்லற இன்ப ரகசியங்களை அடைந்து அதிக நேச விசுவாசமாக இருந்தால் அது சிலர்களுக்கு விரோதமாகயிருக்கிறது. இதற்காகவே சிலர் தன் பிரியங்களை வெளிக்குக் காட்டிக் கொள்ளுகிறதில்லை. மேல் நாட்டார் உள்ளும் புறமும் ஒன்ருகயிருந்து தன் அகத்தில் உள்ளபடிக்கே புறத்திலும் ஸ்திரீகளை நேசித்து பிரியமாக வைத்துக்கொள்ளுகிருர்கள். ஆகையால் அவர்களுக்கு வீரபராக்கிரமமுள்ள குழந்தைகளும், நூதன அறிவு, விசேஷ யுக்திகள், யூகங்கள நிறைந்த குழந்தைகளும் பிறந்து அநேக அற்புதங்களையும் ஆச்சரிய வஸ்துக்களையும் கண்டுபிடிக்கிருர்கள். மேல்நாட்டார்களை விட நம் முன்னேர்கள், முற்காலத்தில் ஸ்திரீகள்மீது அதிக அன்பு வைத்து பக்ஷமாய் நடத்தி யிருக்கிருர்கள். அதனுல்தான் அக்காலங்களில் வீரபராக்கிரமமுள்ள குழந்தைகளும் அநேக அற்புதங்களைக் கண்டு பிடிக்கசக்திகள் உள்ளகுழந்தைகளும் பிறந்து சக்தியாயும் நீதியாயும் நடந்து வந்திருக்கிருர்கள். அக்காலத்தில் ஸ்திரீகள் புருஷர்களைப் போல் சமத்துவம் யுத்தங்களும் செய்திருக்கிருர்கள். பாண்டியன்மகள் மீனுக்ஷியும் திக்கு விஜயம் செய்து ஜெயமடைந்திருக்கிருள். அல்லியும் அரசாண்டிருக்கிருள். இக்காலத்தில் அப்படிக்கில்லாமல் ஸ்திரீகளை பேய் என்றும், பிசாசென்றும், நாய் என்றும், கழுதை என்றும், கூவி அழைத்து ஏளனம் செய்து அவர்களை சாஸ்வித அடிமைகளாக்கி குற்றேவல்களை செய்ய திட்டம் செய்கிருர்கள். தன் அருமை மனைவியை கழுதை என்று அழைத்தால் இவனும் கழுதைதானே. இதை அறியாமல் முற்றிலும் மறந்து கண்டபடிக்கெல்லாம் சிலர்கள் பேசுகிருர்கள். ஆகையால் இக்கொடிய சொற்களை சொல்லாமல் நீக்கி அவர்களிடம் இனிய வசனங்களோடு சம்பாஷித்து அவர்களை அதிக அன்பாயும் பக்ஷமாயும் நடத்தி அவர்கள் மூலமாய் இல்லற தர்மங்களை சரியாக செய்து நல்ல குழந்தைகளைப் பெற்று சகல சம்பத்துக்களுடன் க்ஷேமலாபமாக சுகமாய் வாழ கோருகிறேன். என்று ஆசிரமபோதினி கிருபர் எழுதுகிருர்.

---

## நாடார் மகாஜன சங்கம்

# மதுரை.

1910-ளுத்தில் ஸ்தாபிக்கப்பட்டு 1918-ளுத்தில் 1860-ம்ளுத்திய 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டது-

## 1921-ளுத்திய ரிப்போர்ட்டு.

சிவகாசியில் கூடிய 8-வது கான்பரன்ஸ் பந்தலில் 28-7-22 காலை 10-மணிக்கு ஸ்ரீமான் S. பொன்னையநாடார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூடிய ஜெனரல் மீட்டிங்கில் காரியதரிசி, சனம் பழனிச்சாமிநாடார் அவர்களால் வாசிக்கப்பட்டது

முன் தொடர்ச்சி.

### செ ன் ஸ ஸ்.

கவர்ன்மெண்டாரால் இந்த வருஷத்தில் நடந்த சென்ஸஸ் காரணமாய் நம்ஜன சமூகத்தினர்கள் சங்கத்தைத் தழுவிக் கொள்ளுமாறு செய்வதற்கு ஏற்ற சமயம் கிடைத்தது. வருஷ ஆரம்பத்திலேயே, இந்தியா, பர்மா, இலங்கை முதலிய விடங்களிலுள்ள நம் குலத்தினர்களுக்கு சர்க்குலர்கள் அனுப்பி, சென்சஸில் யாவரும் தங்கள் ஜாதியை நாடார் க்ஷத்திரிய ரெனப் பதிவு செய்ய வேண்டுமென்றும், ஒவ்வொரு ஊர்களிலுமுள்ள தலைவர்கள் எனியுமெரேட்டர் நம் குலத்தினர்களின் ஜாதியையும் தொழிலையும் அவர்கள் சொல்லிய வண்ணம் எழுதச் செய்ய வேண்டுமென்றும் தெரிவித்தோம். அநேக கிராமங்களில் அவ்வாறு நம் குலத்தினர்களை "நாடார் க்ஷத்திரியர்" என பதிவு செய்ய மாட்டோமென்று எனியூமெரேட்டர்களும் சூப்பர்வைஸர்களும் மறுத்தனர். ஆதலால் சென்னைக் கவர்ன்மெண்டாருக்கும் சென்சஸ் சூப்பிரண்டெண்டுக்கும் ஜில்லாக் கலெக்டர்களுக்கும் சங்கத்திலிருந்து விண்ணப்பங்கள் செய்யப்பட்டன.

அதிகாரிகள் முதலில் அஜாக்கிரதையா யிருந்தனர். ஆயினும் இவ்விஷயத்தில் நம் குலத்தினருக்குள்ளிருக்கும் மனோவைராக்கியத்தை அதிகாரிகள் உணர்ந்த பின்னர், நமது குலத்தினர்களை "நாடார் க்ஷத்திரியர்" என்று பதிவு செய்வதற்கு ஆக்ஷேபிக்க லாகாதென சென்சஸ் கீழ் உத்தியோகஸ்தர்களுக்கு கட்டளை யனுப்பினர்கள். இவ்வுத்தரவுகள் பிந்திவந்ததினுலும் சில எனியூமெரேட்டர்களது பிடிவாதத்தினுலும் வஞ்சகத்தினுலும் அநேகர் தங்களை நாடார் க்ஷத்திரிய ரென பதிவு செய்யத் தடைப்பட்டனர். எனினும் போதுமான பேர்கள் வைராக்கியத்தோடு தங்களை நாடார் க்ஷத்திரியர்களென்று பதிவு செய்து நமது ஜன சமூகத்தின் மாருத் தீர்மானத்தை வெளிப்படுத்தினர்.

### "சாணர்" என்னும் சோல்வழக்கு ஒழிவு.

சகல விதமான கவர்ன்மெண்டு ரிக்கார்டுகளிலும் "சாணர்" என்னும் பதத்திற்கு பதிலாக "நாடார் க்ஷத்திரியர்" என்னும் பதத்தை பிரயோகிக்கும்படி சென்னை கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொள்ளவேண்டுமென்று 21-4-21ல் கூடிய கவுன்ஸிலில் செய்த தீர்மானம் இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்விஷயமாய் இராஜ விசுவாசிகளில் சிறந்த வர்களான நம் குலத்தினர்களை மேல்ச்சொன்ன இழிசொல்லால் அழைக் காதிருக்கும்படி 16-5-1921 ல் சென்னைக் கவர்ன்மெண்டாருக்கு விண்ணப்பம் செய்தோம் நமது வேண்டுகோளுக்கிணங்கி சகல சர்க்கார் ரிக்கார்டுகளிலும் இனிமேல் "சாணர்" என்பதற்குப் பதிலாக "நாடார்" என்னும் பதத்தைப் பிரயோகிக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டார் 1921ளு ஜூலைமீ 7உ பிறந்த G. O. No, 785 ல் உத்தரவு அளித்தனர், இவ்வுத்தரவின் நகல்கள் எல்லாக்கவர்ன்மெண்டு ஆபீஸ்களுக்கும் அனுப்பப் பட்டிருக்கின்றன.

தொடரும்.

---

## தற்கால நிலமை.

கடந்த சில ஆண்டுகளாக. உலகத்தின் போக்கை ஒருவாறு ஆராய்ந்து பார்ப்போமாகில், எல்லாம் தானென்ற அகங்காரமும் பேராசை என்ற பேயும் பலமாய் தலைவிரித்தாடிக் கொண்டிருந்திருக்கின்றதென்பதை, நிதரிசனப்படுத்த, மகாயுத்தமே போதிய சான்ருகும்.

எல்லார்தானுகவே யிருக்கவேண்டும், உலகம் முழுதும் தனக்கு அடிமையாய் இருக்கவேண்டுமென்ற துர் ஆசையை, உலகிலுள்ள ஒவ்வொரு ஜீவனும் தலைவு கொண்டிருப்பது சகஜமாயினும். ஐரோப்பாவில் பட்டும் அளவுக்குமீறி அபரிமிதமா யிருந்திருக்கிறது. அதிலும் ஜெர்மானியரில் பலமாய் வேரூன்றியிருந்திருக்கிறது.

உலகம் முழுவதையும் வென்று தன் குடை கீழ் ஆண்டு ஆனந்திக்க வேண்டுமென்ற பேராசையைக்கொண்டவர்களாய் ஜெர்மானியர்கள் சுமார் 40 வருடகாலமாய், சேனை சேர்த்தல், ஆயுதங்கள் செய்தல், முதலிய யுத்த தளவாடங்கள் சேகரிப்பதிலேயே தங்கள் முழுக்கவனத்தையும் செலுத்தி வந்திருக்கிருர்கள் என்று சொல்லப்படுகிறது. இப்படி யில்லாதிருக்குமானல், உலகம் முழுவதும் ஒரு பக்கம் திரண்டு தன்னை நோக்கித் தாக்கிய காலத்தும் யாதொரு உதவியுமின்றி சுமார் 4 வருடகாலம் போர் செய்திருக்கமுடியாது.

ஜெர்மானியர்கள் யுத்தத்திற்கு தயாராயிருந்துகொண்டு போலிக்காரணங்களை வைத்து உலகில் போர் புரியவும் ஆயுத்தமாளுர்கள். தன்னை மீறியபலத்தைக்கொண்டு சிறிய தேசங்களை எல்லாம் நசுக்கிவிட்டு. வல்லரசுகளையும் வலிய சண்டைக்கு இழுத்து ஜெயக்கொடியை நாட்டி, உலக ஏகாதிபத்தியத்தின் தலைமை ஸ்தானம் பெற பேராசைகொண்டதுஜெர்மனி.

யார் எவ்விதமாக நினைத்தாலும் ஆதியும் அந்தமுமில்லாத அன்பு மிகுந்த பரமவஸ்துவின் விருப்பத்திற்குமாருனல், தமது எண்ணம் ஈடேருதென்பதை ஜெர்மானியர்கள் மறந்து விட்டார்கள்.

அவர்களின் துர்ஆசையை அறிந்த நமது காருண்ய பிரிட்டிஷ் கவர்மெண்டார்கள் உலக விடுதலைக்காகவே மகா யுத்தத்தில் கைகலந்து கொண்டார்கள். "நமது ஆசைக்கும் அழிவு ஏற்பட்டுவிட்டது. நமது எண்ணத்தில், பிரிட்டிஷார் மண்ணைப் போட்டுவிட்டார்கள்" என்று,ஜெர்மானியர்கள் தாங்களாகவே, உணரும்வரையிலும், இங்கிலாந்து தன்னையும், தன் பொருள்களையும் அலக்ஷியமாய் தியாகம்செய்தது. இந்தியாவும் தனது பொருளாதார நிலமை மிகவும் நெருக்கடியாயிருந்த மகா யுத்த காலத்திலுங்கூட, பிரிட்டிஷ் சார்பாக, ஏரானமான பொருளையும் வீரர்களையும் வாரி வாரி இறைத்தது.தான் தளர்ந்து தய்துபோன காலத்தில். இந்தியா, தனக்கு பக்க பலமாய் நின்றதைநினைத்து இங்கிலாந்தும் பெருமை பாராட்டி, தனது அன்பான வந்தனத்தை அளிக்கின்றது.தனதுவிடுதலைக்காகவேஇந்திய உலக விடுதலைக்காகப் பாடுபட்ட கக்ஷினரோடு சேர்ந்துநின்றதென்பதை யாருலும்மறுக்கமுடியாது.

மழை விட்டும் தூவானம் விட்டபாடில்லை,என்றபடி மகாயுத்தம்முடிந்தும், உலகத்தில் சமாதானமும் அமைதியும் உண்டானதற்கு இன்னும் அறிகுறிகள் காணப்படவில்லை. எங்குபார்த்தாலும், உள்நாட்டு குழப்பங்களுக்கும், கலகங்களுக்கும். குறைவேயில்லை.

சர்வதேச சங்கத்தார்கள் சமாதானமாகிவிட்டதென்று வெளி பூச்சிபூசிவிட்டார்களே யொழிய, உண்மையான சமாதானம் இன்னும் நிலைபெறவில்லை. சமாதானம் உண்டாகி விட்டால், ஒவ்வொரு தேசத்தாரும் அமைதியுடன் கைத்தொழில், வியாபாரம், விவசாயம் முதலிய அபிவிர்த்தி சாதனங்களைக் கவனித்து,தேசமுன்னேற்றவழிகளிலிறங்க வேண்டாமா? சமாதானம் ஏற்பட்டது வாஸ்துவமானல் அயர்லாந்தின் நிலைமை கவலைக்கிடமாகக் காரணமில்லையே! துருக்கியரும் கிரேக்கரும் இன்னும் துயரடைந்து கொண்டிருக்கக்காரணமில்லையே! சமாதானம் ஏற்பட்டது உண்மையானல், ஜெர்மனியில் உள்நாட்டுச் சண்டைகள் நடக்குமா? ருஷியர்கள் பஞ்சப் பிணியால் படுந்துயருவார்களா? ஆகையால் இன்னும் உண்மையான சமாதானமாகவில்லை என்றே ஆகிறது. இந்நிலைமையில் நம் இந்தியாவின் தற்காலநிலமையைச்சிறிது கவனிப்போம்.

தொடரும் P. TR. மேனிநாதன்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

அறிவுடை நண்பர்கட்கோர் அன்பான ஓர் விண்ணப்பம்.

இழந்துபோன பலத்தை ஒரேவேளை லேகியம் சாப்பிட 1-மணி நேரத்தில் கொடுக்கும், அரையே கவனியுங்கள்.

மெடல் பெற்ற

## ஊர்க்குருவி சத்தின் "லேகியம்"

இந்த லேகியபாகம் மற்றோர் செய்து கொடுத்தால் ரூபாய் 1000 இனாம்.

வெண்பா.

ஊர்க்குருவி சத்தெடுத்து உன்னதமாய் செய்த இந்தச்
சீர்கொண்ட லேகியத்தைத் தின்றவர்கள் பேர்கொண்ட
சிங்கம்போல்வீரஞ் சிறந்தாண்மை தத்துவராய்
மங்கையுடன் வாழ்வார் மகிழ்ந்து.

☞ இந்த லேகியம் ஒவ்வொரு புருஷர்களும் பரிக்ஷித்து சந்தோஷமடைவீர்களாக. தந்தம் தூர்செயலால் ஜீவதந்மை மாகிய இந்திரியத்திற்கு ஏற்பட்டிருக்கும் கெடுதிகளை நீக்குவதில் இதைவிட சிறந்த மருந்து கிடைப்பது அரிது. இந்திரியநஷ்டம் இந்திரிய நீப்பு சீ கிரஸ்கலிதம் நித்திரை ஸ்கலிதம் ஆண்குறி சோர்வு எழுவகை தாதுக்களின் பலஹீனம் அஸ்தி வெட்டை சூடு நரம்பு தளர்ச்சி சதா இடுப்புவலி மலச்சிக்கல் பசி மந்தம் பித்தாதிக்க உஷ்ணவாய்வு கிருமி ரோகம் துர்நீர் வியாதிகள் தேகத்தில் ஓடித்திரியும் பலவித வாயுரோகம் பாரிச வாய்வு நெஞ்சுவலி விரைவாதம் கைகால் அசதி மயக்கம் மறதி முதலியன நிவர்த்தியாகும். சிங்கவீரிய ஆண்தத்துவத்தை யுண்டாக்கி இந்திரியத்தை மணிபோல்கட்டி போக இன்பத்தை கொடுக்கும் இந்த ஊர்க்குருவி சத்தின் லேகியம் குணமில்லை என்று சத்தியமாய்ச் சொன்னால் ரூபாய் 500 இனாம் கொடுக்கப்படும்.

40 நாள் 16 பலம் டப்பி 1-க்கு ரூபாய் 10—0—0 20 நாள் 8-பலம் டப்பி 1-க்கு ரூ 5—0—0 12-நாள் 5 பலம் டப்பி 1,க்கு ரூபாய் 3—0—0. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

மருந்து உபயோகிக்கும் விபர நோட்டீஸ் மருந்துடன் அனுப்பப்படும்.

பினாங்கு. சிங்கப்பூர், கிள்ளான், குவாலாலம்பூர், போர முதலிய பிரதேச வாசகர்கள் மருந்தின் கிரயமும் தபால்சார்ஜ் ரூ2-8 0 யும் சேர்த்து முன்பணம் அனுப்பி மருந்து பெறவேண்டும். மேற்படி ஊரார் வி. பி. யில் அனுப்பும்படி எழுதும் கடிதங்களை அங்கீகரிக்கப் படமாட்டாது. தங்கள் விலாசம் தெளிவாய் எழுதவும். வியாபாரிகளுக்கு 100-க்கு ரூபா பத்து வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

☞ எமது விலாசம்:—

எம். ஏ. மரைக்காயன் அண்டு கம்பெனி,
ஆயுர்வேத வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

☞ எமது சிலோன் ஏஜண்டுகள்.

போ. சேல்லையா செட்டியார்,
கொபண்டரி வத்தை, நாவலாப்பிட்டியா போஸ்டு, சிலோன்.



# நோட்டீஸ்.

கொல்லம் கொச்சுபிலாமூட்டில் எங்கள் கம்பெனிக்குச் சேர்ந்த ஸாமில் டிப்போவில் ஸ்டாக்கு செய்யப்பட்டிருக்கும் தேக்கும் மற்றுமுள்ள பலஜாதி தடிகளும், அறுப்புசாமான்களும், நாளது ஜூலைமாதம் 15௳(1097ஞு ஆனிமீ 31௳) முதல் சனிக்கிழமைகள் தோறும் மேல்குறிப்பிட்டிருக்கிற இடத்தில் வைத்து பகல் 3-மணி முதல் ஏலம்போடப்படும். ஏலத்தில் கேட்க இஷ்டமுள்ளவர்கள் ஏலம் கேட்குமுன் 10 (பத்து) ரூபாய் டேமணி கட்டவேண்டும். ஏலமெடுத்தவர்கள் டி ஏலம் முடிவானவுடன் ஏலத்துகையில் பாதி கட்டவேண்டும். பாக்கித்தொகையை ஏலம் ஸ்திரமான தேதிமுதல் ஒருமாதத்திற்குள் கட்டவேண்டியது. மற்றும் வேண்டிய விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்,


தாமஸ் ஸ்டீபன் கம்பெனி லிமிடெட்,
கொல்லம்.



நாடார் பாங்கு லிமிட்டெட் தூத்துக்குடி,

கரண்ட் பிக்ஸட் டிபாஸிட், சேவிங் பாங்க் கணக்குகள் வைக்கப்படும். வட்டிவிபரம் மனு செய்து தெரிந்துகொள்ளலாம். சரியானசெக்யூரிட்டியின் பேரில் கடன்களும், ரொக்க கிரடிட்டும் கொடுக்கப்படும். எக்ஸ்சேஞ்ச் தொழிலும் நடத்தப்படும்.





## 'நாடார் மகாஜனங்களே!

நமதுகுல முன்னேற்றத்திற்கும் தற்கால நாகரீக நவீனத்திற்கும் நமது சிறுவர் சிறுமிகள் பலரும் வாசிப்பதற்கும், எக்காலத்திலும் நம்குலப் பெருமையை எடுத்துப் பேசுவதற்கும், இன்றியமையாத ஓர் இக்கிரவிமானம் போன்றதும் சென்னை ச. க. சங்கரலிங்க நாடார் எழுதியதுமான

நாடார் மகாஜன சங்கச் சங்கீத மஞ்சரி

என்னும் புஸ்தகத்தை வாங்கி வாசித்து மனனந்த மெய்துங்கள் புஸ்தகம் 1-க்கு விலை அணா 0-4-0 மொத்தமாக ஐந்து புஸ்தகம் தருவித்தால் வி. பி. மூலம் அனுப்பப்படும் ஐந்தணா தபால் ஸ்டாம்பு அனுப்பினால் ஒரு புஸ்தகம் புக்போஸ்டில் அனுப்புவோம் உடனே எழுதுங்கள்,

விலாசம். —

தி. மா. ஐயாவு நாடார்,
பட்டன் பாக்டெரி & ஜெனரல் மெர்சன்ட்
வண்ணாரப்பேட்டை, சென்னை.



# நாடார் பாங்கு

லிமிட்டெட் தூத்துக்குடி,

## மூலதனம் ரூ 20,00,000

வாக்குறுதி செய்யப்பட்ட (SUBSCRIBED) மூலதனம்
(21-7-22 முடிய) ரூபா 360210
செலுத்தப்பட்ட மூலதனம்
(21-7-22-முடிய) ரூபா 167235

தூத்துக்குடியில் நடந்த ஆறாவது நாடார் கான்பரென்ஸின் தீர்மானத்தின்படி பாங்கு ஆரம்பித்து வேலை நடந்து வருகிறது. மூலதனம் ஜாஸ்தியிருக்கவேண்டும். அதற்குத்தகுந்த லாபமிருக்கும் பங்கு எடுத்தவர்களுக்கும் அநுகூலமாயிருப்பதோடுகூட லாபத்தில் ஒருபாகம் நம் பொது நன்மைக்காக செலவிடப்படுமாதலால் நாடார்குலத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் தங்கள் சக்திக்கு ஏற்றவாறுகூடுதலான பங்குகள் எடுத்து இந்தப்பொதுக் காரியத்தை சித்திபெறச் செய்வதன்றியது நம் கடமை. ஆகையால் காலதாமதம் பண்ணாமல் உடனே பாங்கில் பங்குகளுக்கு அப்பிளிக்கேஷன் அனுப்புங்கள் வரவுசெலவுப் பத்திரிகையும் அப்பிளிக்கேஷன் பாரமும் கேட்பவர்களுக்கு உடனே அனுப்பிவிக்கப்படும்.



## இந்தியன்.

(ஒடுக்கப்பட்ட இந்திய மக்களின் ஊழியன்.)

இந்தியாவிலுள்ள ஆறரைக்கோடி தாழ்த்தப்பட்ட மக்களாகு பிறப்புரிமைகளுக்காக அவர் தம் சரியான சுதந்தரங்களுக்காக நியாயமாக வாதம் செய்து அவர்கள் அவற்றை அடையச் செய்விக்கவும் அவரது தீவிர முன்னேற்றத்தைக் கருதியும் வெகு சிரத்தையோடு மாதமிருமுறை வெளியிடப்படுகிறது. இக்நோக்கத்துடன் பிரசுரிக்கப்படும் பத்திரிகை இது ஒன்றேயாகும். பாரத மாதாவின் உத்தம புத்திரரே! ஆதிக்கனைக்காய் சந்தாதாரர் ஆகுமின். விளம்பரம் செய்ய ஏற்றபத்திரிகை இதுவே.

வருடச் சந்தா உள்நாட்டிற்கு ரூ 3 0-0
டை வெளி நாட்டிற்கு ரூ 3-8-0
வி. பி. கூலி பிரத்தியேகம்

விளம்பர விகிதங்கட்கு மானேஜருக்கு எழுதவும்,

மானேஜர்,
"இந்தியன்" ஆபீஸ்,
கொழும்பு.



## தத்துவ இஸ்லாம்.

இஃதோர் சித்திரப் படமுள்ள நூதனமான முதல்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

இச்செந்தமிழ்ப் பத்திரிகையில் இஸ்லாத்தின் தத்துவங்களெல்லாம் உள்ளது உள்ளபடியே வெளிப நடையில் வெளியாக்கப்பட்டு வருகின்றன. இஸ்லாமார்க்க சம்பந்தமான பெரியோர்களின் உண்மைச் சரிதைகளும் எங்கள் நபிகள் நாயகத்தின் மஹாத்மியமும் மிகத்தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் வெளிவரும்.

இஸ்லாம் மார்க்கத்தின் தத்துவத்தையும் அதன் பெருமையையும் முஸ்லிம் ராஜாக்களின் முற்கால தற்கால நிலைமையையும் அறிய விரும்பும் ஒவ்வொருவருக்கும் இப்பத்திரிகை அத்தியாவசியமானது.

வருஷ சந்தா தபாற்கூலி உள்பட ரூ 3-0-0
அயல் நாடுகளுக்கு ரூ 4-0-0

மானேஜர்,
தத்துவ இஸ்லாம் ஆபீஸ்,
காரைக்கால் கோவில்.



## விநோதினி

இது சென்னையிலிருந்து வெளிவரும் ஒரு தேசிய வாரப் பத்திரிகை. கல்வி கைத்தொழில், விவசாயம், வியாபாரம் முதலிய அரிய பெரிய விஷயங்களைத் தன் அங்கத்திற்கூடி வெளிவருமாயினும். பல தேசிய விஷயங்களை சந்தர்ப்பத்திற்குத் தகுந்தவாறு பல படங்களுடன் விளக்கிக் காட்டி வெளிவரும் ஒரு இனிய தமிழ் பத்திரிகை.

மகாஜனங்கள் யாவரும் வாங்கிப்படித்து தேசிய விஷயங்களை அறியவேண்டுமென்ற நன்னோக்கத்தைக் கொண்டு வருடச்சந்தா மிகவும் சொற்பமாக ரூ. 2—8—0 யாக வைக்கப்பட்டிருக்கிறது.

விலாசம்:— மானேஜர்,
விநோதினி ஆபீஸ்,
வேப்பேரி சென்னை.



## விவேகானந்தம்.

(ஓர் உயர்தர தமிழ் மாதாந்தரப் பத்திரிகை.)

இப்பத்திரிகையில் மகாகவி திரு. சுப்பிரமணியபாரதி யாழ்ப்பாணம் நவநீத கிருஷ்ணபாரதி, திருப்பாச்குன்றம் கா. அ. சுப்பிரமணியம், P. இராமசந்திர ஐயர் B A, [illegible] M.M. [illegible] T R, [illegible] M. A. M. R. A. S F R. H S. முதலிய இன்னும் பல தமிழ் வித்வான்களாலும் [illegible], தமிழாசிரியர் [illegible] கதைகள், [illegible] வியாசங்கள் முதலியன வெளிவரும்.

விவேகானந்தம் ஆபீஸ்,
54, பிடாரியார் கோவில் தெரு.
ஜி. டி. சென்னை.



## 'கதா ரஞ்சனி'

(நாவல் நிறைந்த மாதச் சஞ்சிகை.)

இதில் ஒவ்வொருமாதம் [illegible] சேர்க்கப்படும் [illegible]

வருடசந்தா ரூ 1-4-0 [illegible] ரூ 2-0-0 [illegible].

ஸ்ரீ வாணிவிலாச லைப்ரேரி
திருப்பாதிரிப்புலியூர்.

இனாம்! இனாம்!!

புஸ்தக ஆடர்க்கு மோகனமணி நாவல் இனாம்.

| | | | |
|---|---|---|---|
| மதன சிங்கர் | 0-3-0 | [illegible] | 0-12-0 |
| நீலரேகை | 1-0-0 | அசிஸ்ரீமை | 1-2-0 |
| [illegible] | 0-12-0 | பத்மநாபன் | 0-14-0 |
| மிலோத்தமா | 0-6-0 | நசருமாரன் | 0-6-0 |

இன்னும் இதராவல் கிடைக்கும்.

ஸ்ரீ வாணிவிலாச லைப்ரேரி
திருப்பாதிரிப்புலியூர்.



## விநோத விகடன்.

மாதம் இருமுறைப் பதிப்பு பட்டணத் தொருவிசை டிம்மியில் வெளிவரும் இதில் தன் பெயருக்கேற்ப விநோத விகடவியாசங்களும், உள்ளூர் வெளியூர் வர்த்தமானங்களும், அர்த்தி பத்திகளும், கோர்ட் வர்த்தமானங்களும், [illegible] வெளியாகின்றன.

உடனே இதன் [illegible] பெற்றுக்கொள்ளுங்கள்

இதன் வருடசந்தா உள்நாடுகளுக்கு ரூ 3-8-0

பினாங்கு முதலிய வெளிநாடுகளுக்கு வருடசந்தா ரூ 4 0 0

ஆ. ப. வை. கோதண்டராம பாண்டிய நாடார். பத்திராதிபர்,
நெ. 33, நரசய்யர் வீதி,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை.


Printed and Published, By S. A. Muthu Nadar at Sri Muthumariamman Press Aruppukotta.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection